இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 16 | திகதி : 28.11.2021 | விலை : 30.00

"மறைநதி" கத்தோலிக்க ஊடக மையம் யாழ் மறை மாவட்டத்தில் உதயம்

யாழ் மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் பணித்தள மையமாக "மறைநதி" கத்தோலிக்க ஊடகமையம் மறைக்கல்வி நடுநிலைய வளாகத்தில் கடந்த 28.11.2021 அன்று காலை 11.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் மறை மாவட்டத்தில் ஊடகப்பணிக்கென தனிப்பட்ட பணித்தளம் ஒன்று இல்லாத நிலையில் அப்பெரும் குறையை நீக்க யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையின் பெரும் முயற்சியில் ஓர் புதிய கட்டிடத்தொகுதிக்கான அடிக்கல் 2018ம் ஆண்டு நாட்டப்பட்டது. யாழ் பிரதான வீதியில் அழகுற அமைக்கப்பட்ட இவ் மறைநதி ஊடக மையத்தில் இன்றைய நவீன இலத்திரனியல் ஊடக சாதனங்கள் அடங்கலாக சிறப்பான கலைக் கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கலைக் கூடங்களில் ஒலி, ஒளி பதிவுகளை நவீன முறையில் மேற்கொள்ள வசதிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 02

வரண்ட வயல் நனைத்த ஆதிப் பெருந்தியே

ஆலமரமாய் எமைக்காத்த
ஆண்டவனின் சூளிர் நிழலே!
வரண்ட வயல் நனைத்த
ஆதிப் பெருந்தியே!

ஆசி மழை பொழிந்த ஆயனே
உம் பணியின்
ஆறாண்டு நிறையும்
அழகான நேரமதில்
நன்றியோடு செபங்களையும்
பாசத்தோடு வாழ்த்துக்களையும்
பகிர்கின்றோம்

நீண்டு தொடரட்டும்
ஆயரே உம் பணிகள்...

யாழ். ஆயராக 6 ஆண்டுகள்

யாழ். ஆயரின் ஆயர் அருட்பொழிவு தினம்
28.11.2021

வடக்குக் கிழக்கு ஆயர்களைச் சந்தித்த சுவிஸ்லாந்து தூதுவர்

வடக்குக் கிழக்கு ஆயர்களுக்கும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ்லாந்தின் தூதுவர் டொமினிக் பார்க்லர் மற்றும் அவரின் குழுவினருக்குமிடையிலான சந்திப்பு யாழ். ஆயர் இல்லத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. இச்சந்திப்பில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்போதைய அரசியல் நிலைமைகள், அபிவிருத்திப் பணிகள் பற்றிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பின்போது ஆயர்கள் வடக்குக் கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திப்பணிகளில் அரசு அசமந்தப்போக்குடன் செயற்பட்டு வருவதையும், இப்பிரதேசங்களில் இந்திய அரசு முன்னெடுக்க முனையும் பணிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி அவ் அபிவிருத்திப் பணிகளைத் தென்பகுதியில் முன்னெடுக்க முயற்சிப்பதையும் சுட்டிக்காட்டினர். அத்துடன் திருகோணமலை மன்னார் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மறைமுகமாகவும் நேர டியாகவும் அரசு முன்னெடுத்து வரும் சிங்களமயமாக்கல் செயற்திட்டங்களைத் தூதுக் குழுவிடம் விபரித்தனர்.

வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்தின் அழைப்பில் போரில் இறந்தோர் நினைவுகூர்வு

வடக்கு - கிழக்கு ஆயர் மன்றத்தின் அழைப்பின் பேரில் இறந்தோரை நினைவுகூரும் நவம்பர் மாதத்தில் கடந்த 30 வருட உள்நாட்டுப்போரில் இறந்த அனைவரையும் நினைவுகூர்ந்து விசேட வழிபாடுகள் கடந்த 20ம் திகதி சனிக்கிழமை ஆலயங்களில் நடைபெற்றன. போரில் இறந்த அனைவரையும் நினைவுகூர்ந்து ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் சிறப்புத் திருப்பலிகள் மறைமாவட்டத்தில் எல்லா ஆலயங்களிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

இதேபோன்று சிறப்புத்திருப்பலிகளும், ஆராதனைகளும் வடக்குக் கிழக்கு மறை மாவட்டங்களில் குருக்கள், துறவிகள், இறைமக்களின் பங்கேற்புடன் உணர்வுபூர்வமாக இந்நாளில் அனுஷ்டிக்கப்பட்டது.

கலாபூஷண விருது பெற்ற அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி) அடிகளார்

இலங்கையின் கலைத்துறையின் வளர்ச்சிக்காகச் சிறந்த சேவையை வழங்கிய அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி) அடிகளாருக்கு புத் தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலா பூஷண அரசு விருது 03.11.2021 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச கலாசார மண்டபத்தில் வழங்கப்பட்டது. 02

யாழ். மறைமாவட்டத்திற்குப் புதியதோர் திருத்தொண்டர்

யாழ்ப்பாணம் மறைமாவட் டத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் றேமன் றெனால்ட் அவர்கள் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருத்தொண்டராக திருநிலைப்படுத் தப்பட்டார். யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலமையில் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் இவருக்குத் தியாக்கோன் திருப்பட்டம் வழங்கப்பட்டது.

எமது எண்ணம்

இந்தியாவின் பொறுப்பும் அமெரிக்கப் பேச்சின் வெளிப்படைத் தன்மையும்

ஈழத்தமிழர் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை இந்திய மத்திய அரசு நேர்மையாக கையில் எடுக்குமானால், சிங்கள அரசியல் தலைவர்கள் அடங்கிப்போவார்களே தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்காது. ஆனால் இந்தியா எப்போதுமே இலங்கையின் பக்கம் சார்ந்து செயற்படுவதால், இந்தியா ஒரு வல்லாதிக்க நாடு என்பதையும் கடந்து சிங்கள அரசியல் தலைவர்கள் தன்னிச்சையாகவே செயற்படுகின்றனர். அவ்வப்போது இராஜதந்திர ரீதியாக இந்தியாவை ஏமாற்றியுள்ளனர். இதற்குப் பல உதாரணங்களும் உண்டு.

இந்துமா சமுத்திரத்தில் இந்தியா ஒரு பிரதான நாடு. ஆனால் சீனா இந்துமா சமுத்திரத்தில் தன்னையும் ஒரு நாடாக செயற்கையாகக் காண்பித்துள்ளது. இது இந்திய மத்திய அரசின் இராஜதந்திரப் பலவீனம் என்று சொல்வதைவிட, ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா துணிவோடு கையில் எடுக்கத் தவறியதன் விளைவுதான் இந்த நிலைக்குக் காரணமெனலாம்.

இந்திய இராஜதந்திரத்தை எப்படியும் ஏமாற்றலாம் அல்லது தமக்குச் சாதகமாக மாற்றிவிடலாம் என்ற சிந்தனைப் போக்கு, ஜே.ஆர்.ஜய வர்த்தன காலத்தில் இருந்தே தொடர்கின்றது. இன்றைய ஆட்சியிலும் இந்திய இராஜதந்திரம் தோற்கடிக்கப்படுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. உதாரணமாக கொழும்புத்துறைமுகக் கிழக்கு முனைய அபிருத்தி இந்தியா. ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வழங்கும் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு சென்ற செவ்வாய்க்கிழமை சீன அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்படி இந்தியாவை இலங்கை ஏமாற்றுகின்றது என்பது குறித்து ஈழத்தமிழ் மக்கள் கவலை கொள்கின்றனர். இந்தியா தமது தொப்புள் கொடி உறவென்று ஈழத்தமிழர்கள் பலர் இன்று வரை உறுதியாக நம்புகின்றனர். இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் இந்தியா தனது ஆளுகையைச் செயற்படுத்த வேண்டுமென்ற விருப்பம் ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

இருந்தாலும் ராஜீவ்காந்தி தமிழ்நாட்டில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் என்பதைக் காரணம் கூறி இன்று வரை ஈழத்தமிழ் மக்களை இந்தியா பழிவாங்கிறதா என்ற சந்தேகங்கள் ஈழத் தமிழர்கள் மத்தியில் இன்று வரை நிலவுகின்றது என்பதையும் இங்கே சொல்லியாக வேண்டும்.

வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சியுடன் கூடிய ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா ஏன் இன்று வரை அங்கீகரிக்கத் தயங்குகின்றது என்ற ஆதங்கமும், அவ்வாறு அங்கீகரித்தால் இந்தியாவுக்கு ஏதும் பிரச்சினை இருக்கின்றதா என்ற கேள்விகளும் எழாமலில்லை. ஆனால் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு இலகுவான தீர்வை எட்ட வேண்டுமானால், ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிப்பது சிறப்பான ஏற்பாடாகும். அதற்காகப் 13 ஆவது திருத்தச் சடடத்தைத் தூக்கி நிறுத்த முற்படுவது ஆரோக்கியமானதல்ல.

ஐக்கிய அமெரிக்காவில் எவ்வாறு ஐம்பது மாநிலங்கள் சுயாட்சியோடு இயங்குகின்றதோ அவ்வாறே ஐக்கிய இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சிக் கட்டமைப்பும் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள் தனித்த தேசிய சமூகமாகவும் அங்கீகரிக்கப்பட்டு வாழக் கூடிய ஒரு சூழலும் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான பொறுப்பும் உரிமையும் இந்தியாவுக்கே உண்டு.

போர் இல்லாதொழிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்துவிட்டதொரு நிலையிலும் இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகள், சிங்கள அரசியல் தலைவர்களைச் செல்லப்பிள்ளையாகவும் அவர்களைக் கோவப்படுத்தாமலும் காத்து வருகின்றன. ஈழத்தமிழ் மக்களும் சிங்கள ஆட்சியாளர்களைக் கோவப்படுத்தக்கூடாது என்ற எதிர்ப்பார்ப்பும் வல்லாதிக்க நாடுகளிடம் உண்டு.

இதன் பின்னணியில் அமெரிக்காவில் இடம்பெற்ற பேச்சுக்கள் பற்றிய வெளிப்படைத் தன்மை வெளிப்பட வேண்டும். இந்தியாவைக் கடந்து அல்லது இந்தியாவின் ஒப்புதலின்றி எந்தவொரு வல்லாதிக்க நாடுகளும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவதும் ஏற்புடையதல்ல.

அருட்பணி எஸ்.ஏ.எயின்சிலி றொஷான்

மறை ஆசிரியர் தேசியத் தேர்வு I, II, III

மறை ஆசிரியர் தேர்வு டிசம்பர் 18ம் திகதி சனிக்கிழமை (போயா விடுமுறை) அன்று நடைபெறும். தேர்விற்கு விண்ணப்பித்தவர்களின் அனுமதி அட்டைகள் யாழ். மறைக் கல்வி இயக்குநருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ் அனுமதி அட்டைகள் பங்குத் தந்தையர்கள் ஊடாகவே வழங்கப்படும். தேர்விற்குத் தோற்றவுள்ளவர்கள் பங்குத்தந்தையர்களிடம் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி X.W. ஜேம்ஸ் அடிகள் கூறியுள்ளார்.

குருநகர் விமானக் குண்டுத்தாக்குதலில் இறந்தோரை நினைவுகூரல்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது அரச படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் பலியானவர்களின் 28ஆம் ஆண்டு நினைவுநாள் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை அன்று கடைப்பிடிக்கப்பட்டது. புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் சுடரேற்றப்பட்டு இந்நாள் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி A.J.யாவிஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்வஞ்சலி நிகழ்வில் இறந்தவர்களின் உறவினர்கள், பங்கு மக்கள், குருக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிராஞ்சியில் கிறிஸ்து அரசர் பெருவிழா

கிராஞ்சி கிறிஸ்து அரசர் பெருவிழாவானது வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியினை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகளாரும், நற்கருணை வழிபாட்டினை அருட்பணி எட்வின் நரேஸ் அடிகளாரும் பெருவிழாத் திருப்பலியை அருட்பணி எட்வின் சவுந்தரநாயகம் அடிகளாரும் சிறப்பித்தனர்.

மலிவு விலையில் விற்பனைக்கு

- வேதாகம நாட்குறிப்பேடு 2022
- பாலன்குடில்கள்
- கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்கள்
- அலங்கார விளக்குகள்
- கத்தோலிக்க இறுவட்டுப் பாடல்கள்
- அழகான வர்ண மெழுகுவர்த்திகள்
- திருப்படங்கள்
- திருச்சுருபங்கள்
- மோட்சபாதை

புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்

மறைப்பாடசாலை நிலையங்களுக்கு நூல்கள்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினரால் 2021ம் ஆண்டு பங்கு மறைப்பாடசாலை நூல் நிலையங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் வழங்கப் பட்டுள்ளன.

கொய்யாத்தோட்டம், நாரந்தனை, எழுவைதீவு, குழமங்கால், வட்டக்கச்சி, இரணைப்பாலை ஆகிய பங்கு மறைப்பாடசாலைகளுக்கே இந்நூல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கலாபூஷண விருது பெற்ற...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

இவர் கிராம மட்டத்தில் பல உளவளசமூக விழிப்புணர்வுப் பட்டறைகளை நடாத்தி வருகிறார்.

இவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாவார். 'யாழ். ரத்னா' மற்றும் 'சமூக ஒளி' போன்ற விருதுகளையும், யாழ் பல்கலைக்கழகத்தில் மெய்யியலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது அடிகளார் போதைப் பழக்கத்திற்கு உள்ளாகி மீளமுடியாத இளைஞர்களை சமூக, ஆன்மீக மட்டத்தில் மேல் நிலைக்கு மீள்கொணரப் பெரிதும் அக்கறையுடனும், அர்ப்பணத்தோடும் செயற்பட்டு வருகின்றார். அடிகளாரின் சமூகப்பணி மேலும் சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'மறைநதி' கத்தோலிக்க ஊடக...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இக் கலைக்கூடமானது **'ஆயர் யஸ்ரின் கலைக்கூடம்'** எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

எமது மறை மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கி வரும் யாழ் மறை அலை தொலைக்காட்சி, யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஊடகம் - முகநூல் வழியாக, யாழ் மறை மாவட்ட இணையத்தளம் என்பனவற்றின் செயற்பாட்டு மையமாக எதிர்வரும் காலங்களில். மறைநதி கத்தோலிக்க ஊடக மையம் அமையும்.

யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் முழு முயற்சியிலும் பண உதவியுடனுமே இம் "மறைநதி" ஊடக மையப் பணிகள் நிறைவு கண்டன.

மறைநதி ஊடக மையத்தின் உள்ளகக் கட்டமைப்புக்கள், தொழிநுட்ப வடிவமைப்புக்கள் என்பன யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணையக இயக்குநர் அருட்பணி A. அன்ரன் ஸ்ரீபன் அடிகளின் அயராத உழைப்பின் வெளிப்பாடாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும்.

யாழ் மறை மாவட்டத்தின் ஊடக மையத்தின் உதயம் மறைமாவட்ட வளர்ச்சியின் ஓர் படிக்கல்லாயிற்று. இத்திறப்பு விழா தினத்தில் மறைமாவட்டத்தில் ஊடகப் பணிகளில் பணியாற்றுவோர் யாழ். ஆயர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

காவலன் கலசம்

இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறை மாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்

Circular No: 20/2021

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!

திருவருகைக் காலத்துடன் ஓர் புதிய திருவழிபாட்டு ஆண்டை ஆரம்பிக்கின்றோம். இறைதந்தைஇயேசுக்கிறிஸ்து வழியாக வெளிப்படுத்திய மீட்பின் மறை பொருட்களை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டிலும் முழுமையாக வாழ்ந்து வருகின்றோம். புதிய திருவழிபாட்டு ஆண்டில் நாம் நிறைவேற்றும் அனைத்து அருள் அடையாளங்களும், வெறும் சடங்குகளாகவோ சம்பிரதாயங்களாகவோ இல்லாது எமது வாழ்வாகவும் அர்த்தமுள்ள வழிபாடாகவும் அமையவேண்டும்.

திருவருகைக் காலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்

இயேசுக்கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்தின் தொடக்கமாக கிறிஸ்துவின் பிறப்பு விழா அமைகின்றது. "இயேசுவே வாரும்" என்ற எதிர்பார்ப்புடன் விழித்திருந்து செபிக்கும் காலம் திருவருகைக் காலம். "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்: சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசாயா 9:2) நாம், வாழ்வு குறித்தான பெரும் பயங்களோடு இருள் நடுவே பயணிக்கின்றோம். நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எமக்கு விடிவு உண்டு என்ற நம்பிக்கைச் செய்தியுடன் திருவருகைக்காலம் எம்மைச் சந்திக்கின்றது. எம்மைச் சூழ தொடர்ந்து படர்ந்து வரும் துன்பங்களிலிருந்து மீட்புத்தரவல்லவர் இயேசுக்கிறிஸ்து ஒருவரே என்ற மன நிலையுடனும், நம்பிக்கையுடனும் இவ் வாண்டு இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு விழாவை எதிர்கொள்வோம்.

பெரும் தொற்றுக் காலத்தில் நம்பிக்கையில் மிளிர்வோம்

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா (Covid-19) இன் தாக்கம் எமது மனித வாழ்வில் பல கோணங்களில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. நாம் ஆன்மீக, பொருளாதார, சமூகநிலைகளில்பெரும்பாதிப்பை முழு உலகுடன் இணைந்து சந்தித்தோம். நம்மில் பலர் இந்நோயின் தாக்கத்திற்கு உட்பட்டோம், எம் உறவுகள் சிலரை இந் நோய் காவுகொண்டது. தனிமைப்படுத்தல்கள், ஊரடங்கு, போக்குவரத்துத் தடை என்பனவற்றால் பெரும் துன்பங்களைச் சந்தித்தோம். இருப்பினும் "கடவுள் நம்மோடு" (மத்தேயு 1:23) இத் துன்ப காலத்தில் இருந்து வருவதை உணர்ந்து கொண்டோம். ஆலயங்கள் சென்று திருப்பலிகள், வழிபாடுகளில் இணைந்து மன்றாடவாய்ப்புஇல்லாதபோதும்தொடர்பு சாதனங்கள் வழியாகவும் சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் நாம் வீடுகளில் இருந்து வழிபட இறைவன் வாய்ப்பளித்தார். எம்மையும் யாழ் திரு அவையையும் இப்பெரும் தொற்றில் இருந்து காத்து வருகின்றமைக்கு இறைவனுக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்.

பெரும் தொற்று இன்னமும் எம்மை விட்டு நீங்கவில்லை. எனவே சமூகப் பொறுப்புடன் விழிப்பாக இருந்து எம்மையும் எமது பிரதேசத்தையும் தொற்றின் தாக்கத்திலிருந்து பாதுகாப்போம்.

இன்றைய அரசியல் பொருளாதார நிலை

எம் நாடு முன்னொருபோதும் இல்லாத பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மக்களின் அன்றாட பாவனைப் பொருட்களின்பன்மடங்குவிலையேற்றம், வேலை வாய்ப்பின்மை என்பன எமது எதிர்கால வாழ்வின் மட்டில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் 'ஜனநாயகம்' தொடர்ந்து கேள்விக்குறியாகவே உள்ளது. நீதி - ஒழுக்கம் - சட்டம் என்பன ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கின்றது, எம் துயரக் கதை எப்போ? எப்படி? முடியும் என அங்கலாய்க்கின்றோம்.

இறைவன் ஒருவரே எம் மீட்பர். அவரே இத் துயர நிலையில் இருந்து எம்மை மீட்க வல்லவர் என்பதை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வோம். "அஞ்சாதே நான் என்றும் உன்னோடு இருக்கிறேன்" (எசாயா 41:10) என்ற இறைவனின் வார்த்தையில் நம்பிக்கையுடையவராய் பிறக்கவிருக்கும் பாலக இயேசு இன்றைய அரசியல், பொருளாதார நெருக்கடியிலிருந்து எம்மை மீட்க மன்றாடுவோம்.

தொடரும் அன்பிய ஆண்டு

2021 ஆம் ஆண்டை யாழ் திரு அவை அன்பிய ஆண்டாகப் பிரகடனம் செய்து முழு மூச்சுடன் செயற்படத் தொடங்கியபோதும், பெரும் தொற்றின் பாதிப்புக் காரணமாக நாம் திட்டமிட்ட ஒழுங்கிற் கமைய செயற்திட்டங்களை முறையாக முன்னெடுக்க முடியவில்லை.

எனவே, எதிர்வரும் 2022ம் ஆண்டை அன்பிய ஆண்டாகத் தொடர்ந்து கடைப்பிடித்து ஆதிக் கிறிஸ்தவ திரு அவைக் குழுமங்களாக எம் பங்குத் திரு அவையில்அன்பியங்களைக்கட்டியெழுப்ப திருநிலையினர், மற்றும் பொதுநிலையினரை அன்புடன் அழைத்து நிற்கின்றேன்.

இளையோரைக் காத்திடுவோம்

எமது இளையவர்களை கல்வியிலும் ஞானத்திலும் வளர்க்க வேண்டியமை எம் பாரிய பொறுப்பு. இன்று எமது பிள்ளைகள் சமூக ஊடகங்களின் தாக்கத்தால் வயதிற்கு முந்திய முதிர்ச்சியை அடைவதுடன், சமூக ஊடகங்களுக்கும் அடிமையாகி வருகின்றனர். இதனால் அவர்களின் அன்றாட வாழ்வு, சிறப்பாக கல்வி, வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் எமது பிரதேசங்களில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை இளையோரைப் பெரிதும் பாதிக்கிறது. எனவே இவர்களைப் பொறுப்புடன் சீர்செய்து இறை நம்பிக்கை வாழ்வில் வளர்க்கப் பெற்றோர், பெரியோர் கடமையுள்ளவர்கள் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிப்போம்

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வத்திக்கானில் நடைபெற இருக்கும் உலக ஆயர்களின் மாமன்றத்திற்கான தயாரிப்பு, உலகின் அனைத்து மறை மாவட்டங்களிலும் கடந்த 2021 ஒக்டோபர் மாதம் 17ம் திகதியிலிருந்து "முதல் நிலைத் தயாரிப்புப் பணிகள்" ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

இம் மாமன்றத்தின் தனிச் சிறப்புக்கள் பற்றி உங்கள் பங்குகளில் இடம்பெறும் மறையுரைகள், கருத்தரங்குகள் மூலமும் "பாதுகாவலன்" பத்திரிகை வழியாகவும் எமது மறைமாவட்ட சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சிகள் வழியாகவும் உங்களுக்கு அவ்வப்போது அறியத்தரப்படும்.

'இறை மக்கள் எப்படிப்பட்ட ஒரு திருஅவையை எதிர்பார்க்கின்றனர்?' என எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம் மாமன்றத்தின் வழியாக அறிய விரும்புவதுடன், அருள்நிலையினரும், துறவுநிலையினரும், பொதுநிலையினரும் இணைந்து கூட்டொரு இயக்கத் திரு அவையாகப் பயணிக்க அழைப்பு விடுக்கின்றார். நாமும் இவ் அழைப்பை ஏற்று, யாழ் திருஅவையாக எமக்கு வழங்கப்பட்ட இவ் ஆயத்த நாட்களில் ஆக்கபூர்வமான விருப்புக்களையும், ஆலோசனைகளையும் சிந்தித்து வெளிப்படுத்துவோம்.

நிறைவாக

இறைமகன் இயேசு மனித அவதாரம் எடுத்து மனுக்குலத்துக்கு மீட்பை ஏற்படுத்திய விழா கிறிஸ்து பிறப்பு விழாவாகும். மெசியாவின் வருகையானது எம் ஒவ்வொருவருக்கும் மீட்பைத் தரவேண்டுமெனவும், எல்லோர் மனங்களிலும் மகிழ்ச்சியையும் அமைதி நிறை வாழ்வையும் தரவும் ஆசித்து நிற்கின்றேன்.

பிறக்க இருக்கும் பாலகன் இயேசு எம்மை வழிநடத்துவாராக! அன்னை மரியின் பரிந்துரை எமது அனைத்துப் பணிகளிலும் துணையிருப்பதாக!

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும்
பக்தியுள்ள

+ ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்

பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட்
ஞானப்பிரகாசம்
யாழ் மறைமாவட்ட ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,

முத்திப்பேறுபெற்ற தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம்

வத்திக்கானில் அடுத்த ஆண்டு மே மாதம் 15ம் திகதி வழங்கப்படவுள்ளது

இந்தியாவின் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த முதத்திப்பேறு பெற்ற மறைசாட்சி தேவசகாயத்துக்கு அடுத்த ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி வத்திக்கானில் புனிதர் பட்டம் வழங்கப்படுகிறது.

தேவசகாயம்

குமரி மாவட்டம் நட்டாலத்தைச் சேர்ந்தவர் இவர் 23.04.1712-ம் ஆண்டு வாசுதேவன்- தேவகியம்மை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். நீலகண்ட பிள்ளை என்ற இயற் பெயரைக் கொண்ட இவர் 1745ஆம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி கிறிஸ்தவராகத் திருமுழுக்குப் பெற்றார். 1952-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ம் திகதி ஆரல்வாய் மொழி காற்றாடிமலையில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் இவர் கத்தோலிக்க கிறிஸ்தவ சபையின் மறை சாட்சியாக அறிவிக்கப்பட்டார்.

இவருக்குப் புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று தமிழகக் கத்தோலிக்க திருச்சபை சார்பிலும், கோட்டார் மறை மாவட்டம் சார்பிலும், இறை மக்கள் சார்பிலும் வத்திக்கானில் உள்ள புனிதர் பட்ட மளிப்புப் பேராயத்துக்கு தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது.

இதைத் தொடர்ந்து அதன் முதல் படியாக மறை சாட்சி தேவசகாயத்துக்கு முத்திப்பேறு பெற்றவர் எனக் கடந்த 02.12.2012 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

திகதி அறிவிப்பு

அன்றைய தினம் இதற்கான விழா நாகர்கோவில் கார்மேல் பாட சாலையில் நடந்தது. இந்த விழாவில் திருத்தந்தை அவர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இந்தியாவின் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ, தேவசகாயம் முக்திப் பேறுபெற்றவர் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து கடந்த 21-2-2020 அன்று தேவசகாயத்துக்குப் புனிதர் பட்டம் வழங்கலாம். அதற்குத் தடை ஏதும் இல்லை என்ற அறிவிப்பைத் திருத்தந்தை அவர்கள் வெளியிட்டார். அதைத்தொ டர்ந்து 3-5-2021 அன்று வத்திக்கானில் நடந்த கர்தினால்கள் கூட்டத்தில் தேவசகாயத்துக்குப் புனிதர் பட்டம் வழங்கும் இடமாக வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர் சதுக்கம் அறிவிக்கப்பட்டது. கொரோனா பரவல் காரணமாக இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தான் அடுத்த ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கும் விழா வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கான உத்தரவுக் கடிதத்தை புனிதர் பட்ட பேராலயத்தின் தலைமைச் செயலாளர் பேபியோ பபானே தேவ சகாயம் புனிதர் பட்ட திருப்பணிக்குழு வேண்டுகையாளர் அருட்பணியாளர் டான் ஜோசப் ஜான் எல்பெஸ்டனுக்கு அனுப்பியுள்ளார்.

அவர் அந்த உத்தரவுக் கடிதத்தை கோட்டார் மறைமாவட்ட ஆயர் நசரேன் சூசை மற்றும் புனிதர் பட்டத் திருப்பணியின் துணை வேண்டுகையாளரும், கோட்டார் மறை மாவட்ட பொறுப்பாளருமான அருட்பணியாளர் ஜான் குழந்தைக்கும் அனுப்பியுள்ளார். இந்தக் கடிதம் குறித்து அவர்கள் கூறியதாவது.

திருத்தந்தை குறிப்பிடுகையில்...

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் அவர்களுக்குப் புனிதர் பட்டம் வழங்குவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவுக் கடிதத்தைப் புனிதர்பட்ட பேராலயத்தின் தலைமைச் செயலாளர் பேபியோ பபானே அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் என்னும் லாசருக்குப் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சி எதிர் வரும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.இந்த விழாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முத்திப் பேறுபெற்ற மேலும் 5 பேருக்கும் புனிதர் பட்டங்கள் வழங்கப்பட இருக்கின்றது. புனிதர் பட்டங்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்குவார்.

காவலன் கலசம்

ஐரோப்பியத் தமிழரின் ஆன்மீகத் தந்தை அருட்கலாநிதி பிரான்சிஸ் ஜெயசேகரம்

அருட்கலாநிதி பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் தனது குருத்துவ திரு நிலைப்படுத்தலின் 50 ஆண்டு நிறைவை நினைவுகூரும் இவ்வேளையில் ஐரோப்பா வாழ் தமிழர்கள் சார்பில் எனது நன்றிப் பெருக்குடனான வாழ்த்துக்களைத் தெரி விப்பதில் மகிழ்வடைகின்றேன். யேர் மனியில் தமிழர்கள் பெருமளவில் வரத் தொடங்கிய எண்பதுகளில் எமது ஆன் மீகத்தேவைகளைத்தாய்மொழியில்நிறை வேற்றத் தமிழ் அருட்பணியாளர்கள் எவ ருமே இருக்கவில்லை.

ஒருசில வருடங்களின் பின்னர் சில தமிழ் அருட்பணியாளர்கள் வருகை தந்திருந்தாலும், அருட்கலாநிதி பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளாரின் யேர்மன் வரு-கையே ஐரோப்பாவின் பல நாடுகளிலும் ஆன்மீகப் பணியகங்கள் நிரந்தரமாக அமைப்பதற்கும் செயலாற்றுவதற்கும் வழி வகுத்தது எனலாம்.

உரோமையில் கலாநிதிப் பட்டம் பெற்று தாய்நாடு திரும்பவிருந்த அவரை ஒஸ்நாபுறுக் மறைமாவட்ட ஆயர் சில ஆண்டுகள் யேர்மனியில் தங்கியிருந்து தமிழர்களைப் பராமரிக்குமாறு கேட்டதற் கிணங்க அவர் சில வருடங்கள் பணி யாற்ற எண்ணியபோதும் அது 13 வருடங் கள் நீடித்தது. அவர் தனியாக யேர்மனி யில் வாழும் தமிழர்களுக்கு மட்டும் பணியாற்றவில்லை மாறாக நெடுந்தூரம் தொடரூந்துகளில் பயணம் செய்து நெதர் லாந்து, சுவிஸ், டென்மார்க், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் எம் மக்களைச் சந்தித்து அவர்களின் ஆன் மீகத் தேவைகளை நிறைவேற்றியதுடன், நீண்டதூரப் பார்வையில் அங்கும் பணியகங்கள் உருவாக வேண்டும் என்ற தமது எண்ணத்தை நிஜமாக்கினார். தற்போது எத்தனையோ ஊடகத் தொடர் பாடல் வசதிகள் உள்ளன ஆனால் அந் நாளில் யேர்மன் முழுவதும் சிதறி வாழ்ந்த எம்மவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவது இலகுவானதாக இருக்க வில்லை.

கைத்தொலைபேசி இல்லாத காலம். ஆரம்பத்தில் 10 நகரங்களில் தொடர்பாளர் களை நியமித்து வழிபாடுகளை நடத்தி னார். அதன் பின்னர் பாசறை, கருத் தரங்குகள், தியானங்கள், இல்ல வழி-பாடுகள், யாத்திரைகள், கலைமாலைகள், ஒளிவிழாக்கள் என அடிகளாரின் எண் ணக்கரு விரிவடைந்தது. ஒவ்வொரு பங் கிற்கும் தொடர்பாளர்களைத் தெரிவுசெய்து அவர்கள் சுதந்திரமாகச் செயலாற்ற உரு வாக்கம் செய்தார். ஒன்றைச் செய்ததில் இருந்து தொடர்வதென்பது இலகுவானது ஆனால் ஒன்றைத் தொடங்குவதென்பது கனவுகாண்பது போன்றது. அடிகளார் கண்ட கனவுகள் பல. அவற்றை நன வாக்க அவருக்கு பல நண்பர்கள் கிடைத் தார்கள். அவர்களுடன் ஒன்றுசேர்ந்து பல நிகழ்வுகளை நடத்தினார். இவற்றில் முக்கியமாகக் கேவலார் யாத்திரை யையும் தொடுவானம் பத்திரிகையையும் குறிப்பிடலாம். 1988 இல் 50 பக்தர்களு டன் தொடங்கிய யாத்திரை இன்று பல்லாயிரம் மக்களுடன், கேவலார் தலத்திலேயே அதிக மக்கள் ஒரு நாளில் பங்கேற்கும் யாத்திரையெனப் பெயர் பெற்றுள்ளது. அடுத்ததாக அடிகளாரின் கன வாக 1994 ஆவணியில் உதித்த தொடு வானம் பத்திரிகை அவர் தாய்நாடு திரும் பிய பின்பு இன்றும் அவரைத் தொடர்ந்து வந்த இயக்குனர்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. அவர் இங்கு செய்த சாதனை கள் ஏராளம். அவற்றை எழுத இங்கு இடம்போதாது.

தாய்நாடு சென்ற பின்னரும் அவர் பணி முடிந்து விடவில்லை. குருநகர் பங்குத் தந்தையாக இருந்தபோது அங்கு வாழும் மக்கள் மட்டில் மிகவும் பரிவு கொண்டார். முதலில் வலைத் தொழிற் சாலையைச் செயற்படுத்தவும் அங்கு பலருக்கு மேலும் தொழில் வாய்ப்புகள் உருவாகவும் முன்னின்று உழைத்தார். அதன்பின் அல்லைப்பிட்டியில் "வெண் புரவி நகர்" எனும் வீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 150க்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள், கிணறுகள், பாலர் பாடசாலை, ஆலயம் போன்றவற்றை அமைத்தது அவரின் சிந்தனையின் செயலாக்கமாகும். பிற்காலத்தில் நிறுவன உதவிகள் கிடைக்காத போதும் வெளிநாடுகளில் வாழும் அவருக்குத் தெரிந்த அன்பர்கள், நண்பர்களின் உதவியுடன் இப்பெரும் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றார்.

ஒரு வீடு கட்டுவதே இயலுமா என்ற நிலையில் அடிகளார் ஒரு கிராமத்தையே உருவாக்கிக் காட்டியுள்ளார்.

அடிகளார் தனது குருத்துவப் பணியின் 50 ஆண்டுகளில் ஐரோப்பாவிலும் தாய் மண்ணிலும் ஆற்றிய, ஆற்றிவருகின்ற அனைத்துப் பணிகளுக்கும் இவ்வேளை யில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்னும் பல்லாண்டுகள் இறை ஆசீருடனும் கேவலார் அன்னை யின் பாதுகாவலுடனும் நலமாக வளமாக வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

தூரைசிங்கம் கமிலஸ்,
முன்நாள் செயலர்,
தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்,
யேர்மனி

எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்க உதவுவது நற்செய்தி

நற்செய்தியை நம் வாழ்வின் மையமாகக் கொண்டு, உடன் பிறந்த உணர்வுடன் கூடிய அன்பில் அதற்கு சான்றுபகரும்போது, வருங்காலத்தை நம்மால் நம்பிக்கையுடன் எதிர்நோக்க முடியும் என, இவ் வார செய்தித் குறிப்பில் திருத்தந்தை குறிப்பிட்டுள் ளார்.

'நாம் நம் வாழ்வின் மையமாக நற்செய்தியை வைத்து உடன்பிறந்த உணர்வுடன் கூடிய அன்பில் அதற்கு சான்றுபகரும்போது, இன்று நாம் எதிர் நோக்கும் அனைத்துவிதமான, சிறிய மற்றும் பெரிய புயல்களையும் தாண்டி, வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர் நோக்க உதவும்' என்கிறது திருத்தந்தையின் செய்தி.

ஈழத்தமிழின கூட்டழிப்பின் நினைவுகூரலுக்கான ஒரு பொதுப்படிமம் காலத்தின் கட்டாயத் தேவை

இளவாலை மறைக்கோட்ட முதல்வர் வலியுறுத்து

"போரில் இறந்தவர்களை நினைவு கூருவது பல்வேறு தினங்களில் தமிழ் மக்களிடையே நடைபெற்றாலும், தமிழர் களுக்கு இப்போது தேவைப்படுவது ஈழத் தமிழினத்தின் கூட்டழிப்பின் நினைவுகூர லுக்கான ஒரு பொதுப்படிமம் கட்டமைக் கப்படவேண்டியது காலத்தின் அவசிய மாகும்." என்று இளவாலை மறைக்கோட்ட முதல்வர் வணபிதா கி. ஜோ. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மூன்றாவது சனிக்கிழமையை போரில் இறந்தோரைக் கூட்டாக நினை வேந்த விடுத்த அழைப்பு தற்போது சர்ச்சை யாக வெடித்துள்ளது.

இது தொடர்பில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அந்த அறிக்கையில் மேலும், தெரி விக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

கடந்த சில தினங்களாக வட, கிழக்கு ஆயர்கள் விடுத்த கார்த்திகைத் திங்கள் 20ஆம் நாள் நினைவுகூரல் விடயமாகப் பல தரப்புக்களிலிருந்து விமர் சனங்கள், மீளப்பெறுமாறான கோரிக்கை கள், பத்திரிகைகளிலும், சமூகஊடகங்களிலும் வந்து கொண்டிருப்பது நாம் அறிந்த விடயம் கவலைக்குரியதுமாகும். எல்லா மதங்களிலும் 'நினைவுகூரலுக்கான சடங்குகள், நாட்கள் கடைப்பிடிக்கப்படுகின் றன. இந்து மக்கள் ஆடி அமாவாசை, சித் திரா பௌர்ணமி, என்றும், கத்தோலிக் கர்கள் நவம்பர் மாதத்தை சகல ஆத்து மாக்களின் மாதமென்றும் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

பல நூற்றாண்டுகளாக மத நினைவுகூரல் இடம்பெற்று வருகின்றது. தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பல இயக்கங்கள் வெவ்வேறு தினங்களில் தம் சக போராளி-களை நினைவுகூருகின்றனர். இன்னும் முள்ளிவாய்க்கால் கூட்டு நினைவுகூரல் என கூட்டழிப்பின் பின்னரான காலப்பகுதி யில் அனைத்து தமிழ் மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

எனவே, தமிழ் மக்களிடையே போராட்டத்தை தொடர்ந்து போரில் இறந்த வர்களை நினைவுகூருவது என்பது பல் வகைமையைக் கொண்டதாகக் காணப் படுகிறது.

ஆயர்கள், கத்தோலிக்க நோக்கி லிருந்து, கார்த்திகை மாதமான சகல ஆத்துமாக்களின் மாதத்தில் போரில் இறந்த அனைவரையும் விசேடமாக நினைவு கூர்ந்து செபிக்கும்படி 20ஆம் திகதியை நிர்ணயித்து கத்தோலிக்கர்களுக்கு அழைப்பு விடுத்தனர். போரில் இறந்தவர்களை நினைவுகூருவது பல்வேறு தினங்களில் தமிழ் மக்களிடையே நடைபெற்றாலும், தமிழர்களுக்கு இப்போது தேவைப்படு வது ஈழத்தமிழினத்தின் கூட்டழிப்பின் நினைவுகூரலுக்கான ஒரு பொதுப்படிமம். ஒரு பொதுப்படிமம் கட்டமைக்கப்பட வேண்டியது காலத்தின் அவசியமாகும். படிமம் கட்டமைக்கப்படுவதனூடான நோக் கம், அதனைச் சுற்றிய அணிதிரட்டலின் இயங்குதலை, தமிழினத்தின் இன்றைய அடக்குமுறை எதிர்ப்புக்கான சக்தியாக மாற்றுவதேயாகும். இதுவே நினைவுகூர லின் இன்றைய தேவையாகும். தமிழ் மக்களாகிய நாம் கூட்டு நினைவுகூரலுக் கான பொதுப்படிமத்தைக் கட்டமைத்து அதனை தமிழ்மக்களின் அடக்குமுறைக்கு எதிரான சக்தியாக மாற்றவேண்டும். அத் துடன், அந்தப் படிமம், தாயகம், புலம்பெயர், தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஒரு புள்ளியாகவும், இனஅழிப் புக்கு எதிரான நீதி கோரும் ஒன்றாக மாற்றுவதே காலத்தின் தேவையாகும் - என்றுள்ளது.

புனித யோசேப்பு, அர்த்தமுள்ள மனித உறவுகளுக்கு முன்மாதிரிகை - திருத்தந்தை

புனித யோசேப்பு, உலகளாவியத் திருஅவையின் பாதுகாவலராக அறிவிக் கப்பட்டதன் 150ம் ஆண்டின் நிறைவாக திருஅவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் புனித யோசேப்பு ஆண்டு டிசம்பர் 8ம் திகதி நிறைவடைகிறது. இந்த யோசேப்பு ஆண்டை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியதாவது: அன்புச் சகோதரர்களே, சகோதரிகளே, மீட்பு வரலாற்றில், புனித யோசேப்பின் பங்கு குறித்து இன்று சிந்திப்போம். நற் செய்திகளில் இயேசு "யோசேப்பின் மகனா"கவும் (லூக். 3:23-4:22 யோவா. 1:45, 6:42), "தச்சருடைய மகனா"கவும் (மத். 13:55 மாற் 6:3) சுட்டிக்காட்டப்படுகிறார்.

இயேசுவின் குழந்தைப் பருவத்தை விவரிக்கும் நற்செய்தியாளர்கள் மத்தேயு வும் லூக்காவும், அதில் யோசேப்பின் பங் கிற்கு இடமளித்துள்ளனர். இவ்விரு நற் செய்திகளில் வழங்கப்பட்டுள்ள இயேசுவின் மூதாதையர் அட்டவணைகளில், இயேசு யோசேப்பின் மகனாக குறிக்கப்படுகிறார். அதேநேரம், யோசேப்பு, இயேசுவின் உயிரி யல் தந்தை இல்லை என்பதும் உறுதிசெய் யப்படுகிறது. இருந்தபோதிலும், யோசேப்பு, இயேசுவிடம், உண்மையான தந்தைமைப் பண்பைச் செயற்படுத்துகிறார். யோசேப்பு, சமுதாயத்தில், விளிம்புநிலையில் உள்ளவ ராகத் தெரிகின்றபோதிலும், இவர், மீட்பு வரலாறு, கடவுளின் வாக்குறுதிகள் முழு மையாக நிறைவேறுவது ஆகியவற்றின் மையமாக உண்மையிலேயே இருக்கி றார். எனவே நாமும், நற்செய்தியின் மீட்பு ளிக்கும் செய்தியைப் பரப்புவதற்கு, நம் பங்கு எவ்வளவு சிறிய அளவில் இருந்தா லும், அப்பணியை ஆற்ற நாம் அழைக்கப் பட்டுள்ளோம் என்பதையும், சமுதாயத்தின் விளிம்புநிலையில் உள்ளவர்களும், கடவு ளின் மீட்புத்திட்டத்தில் ஒரு சிறப்புப் பங்கைக் கொண்டிருக்கின்றனர் என்பதையும், இது நினைவுபடுத்துகின்றது. நற்செய்தியாளர் லூக்கா, புனித யோசேப்புவை, இயேசு மற் றும் மரியாவின் பாதுகாவலராகச் சித்த ரிக்கிறார். அதுபோலவே, வரலாற்றில் கிறிஸ்து வின் மறையுடலாம் திருஅவை தொடர்ந்து இருப்பதற்கு, புனித யோசேப்பு, உலகளா வியத் திருஅவையின் பாதுகாவலராகத் தன் பங்கை ஆற்றிவருகின்றார்.

காவலன் கலசம்

கடவுளின் கட்டாய லீவுதானா இக்காலம்?

கடந்து வந்த காலங்களாக!

நாம் வாழ்க்கையில் இயற்கை வகுத்த காலங்களைக் கடந்து வந்துள்ளோம். கோடை காலம், வசந்த காலம், இளவேனிற்காலம், குளிர்காலம் எனக் காலங்களுக்கேற்ப வாழ்க்கையை வகுத்து வாழ்ந்துள்ளோம். இன்று இந்தக் காலங்களைப் பற்றி நாம் பெரிதாக நினைப்பதேயில்லை! எம் மனதில் இருப்பது எல்லாம் இப்போது கொரோனாக் காலம் என்று சொன்னால் மிகையாகாது. இந்தக் காலத்தை எப்படியாவது கடந்தே தீர வேண்டும் என்பதற்கு யாவரும் விதிவிலக்கானவர்களல்ல. எப்படி கடந்து போகப் போகின்றோம் என்ற பதிலில் தான் கவனம் (focus) இருக்கின்றது. கொரோனாவோடு வாழுவதற்குக் காலம் படிப்படியாக எங்களைப் பயிற்றுவிக்கின்றது. இனம் புரியாத அச்சமும், நிச்சயமற்ற தன்மையும் உள்ளத்தின் மூலையில் ஓரமாக ஒதுங்கிக் கிடந்தாலும் வாழ்ந்து தானே தீர வேண்டும் என்று உள்ளம் இயல்பாகச் சிந்திக்கத் தொடங்குகின்ற காலத்தில் நிற்கின்றோம். காலங்களும், நேரமும் நம் கட்டுப்பாட்டில் இல்லை என்ற யதார்த்தத்தை ஓரளவு புரிந்து கொண்டால் நாம் ஓடிக்கொண்டிருக்கலாம். எனினும் கொரோனாவின் விளைவுகளாக வாழ்க்கை ஓட்டத்தை நிறுத்திச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்

அருட்பணி ஸ்ராணி அன்ராணி (அமதி)

கும் தள்ளப்படுகின்ற சூழ்நிலை பயணத் தடைகளால், சுகாதார வழிகாட்டல்களால் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஒருவிதத்தில் சொல்லப் போனால் கட்டாய லீவு திணிக்கப்பட்டுள்ளது. (compulsory leave) என்று கூடச் சொல்லலாம்.

கடவுளின் கட்டாய லீவு?

குறிப்பாக பணியில் சிலரைக் கட்டாய லீவில் அல்லது கட்டாய ஓய்வில் அனுப்புவது பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட பணியில் பொறுப்பில்வாமல், ஒழுங்கீனமாக, மோசடியாக நடந்துகொள்ளும் பணியாளருக்கு கட்டாயமாக ஓய்வு கொடுப்பது நிர்வாகத்துறை சார்ந்த ஒரு ஒழுங்கீனம் சார்ந்த ஒரு கட்டுப்பாடு என்பது நாம் அறிந்ததே! இத்தகைய பின்புலத்தில் நாமும் கட்டாய லீவில் அனுப்பப்பட்டவர்களாகவே பயணத் தடைகள் மத்தியில் வாழ்ந்து வந்தோம் என்பதை மறுக்க முடியாது. ஆலயங்களை மூடுவதும், வழிபாடுகளை முடக்குவதும் அரங்கேறி வருகின்றது. இதற்கு உடனடிக் காரணமாகக் கொரோனாவைச் சுட்டிக் காட்டினாலும், கடவுள் தரும் கட்டாய லீவாகவே இதை நாம் நோக்க வேண்டும். ஓய்வு அல்லது லீவு என்பது மனிதனின் வாழ்க்கையோடு இணைந்த ஒன்று என்பதை யாரும் நிராகரிக்க முடியாது. கடவுளே ஓய்ந்திருந்தார் என்று தொடக்கநூலே கூறுகின்றது. இதைத் தான் நாம் ஆண்டவரின் நாள்" என்று ஞாயிறை நினைவு கூருகின்றோம். இந்தக் கட்டாய லீவு எதற்காக? கடவுளின் திட்டமாக இதை நோக்குமிடத்தே இதனைப் பயனுள்ள விதத்தில் எம் வாழ்க்கையை மாற்றியமைக்கலாம். கட்டாய லீவை நாம் பொழுதுபோக்குகளோடு மட்டும் வரையறுத்து வாழ முடியாது. போக்குவரத்தில் "நில், கவனி, செல்" என்ற மூன்று வார்த்தைகள் எம் உயிரோடு தொடர்புபட்டவை என்பதை மறுக்க முடியாது. அதே போன்று இக்காலமும் கடவுளின் கட்டாய லீவாக நோக்கபட வேண்டும். இப்பயணத் தடைக் காலத்தில் கடவுளின் கட்டாய லீலை எதற்காக பயன்படுத்தினோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது முக்கியமானது. ஆண்டவரின் நாள் (Lord Day) என்பதை மனதில் இருத்தி கடவுளோடு நேரம் செல வழிக்க வாழ்வைப் பார்க்க, வாழ்க்கையின் ஒழுங் கீனங்களை மாற்றியமைக்க முயற்சி செய்தோமா? இதற்கு மாறாக கைபேசிகளிலும் இணையத்தளங் களிலும் தொலைக்காட்சிகளிலும் நேரத்தைத் தொலைத்தோமா என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பது முக்கியமானது. கட்டாய லீவு கடவுள் நாம் மனம் மாறி வாழ்வதற்கான சந்தர்ப்பமாகவும், அடுத்திருப் பவருக்கு நன்மை செய்யும் காலமாகவும் பயன்படுத்தி யிருந்தால் நிச்சயம் அது நம் வாழ்வை வளப் படுத்தியிருக்கும். கடவுளும் எங்கள் ஒழுங் கீனங்களை, அன்பற்ற வாழ்க்கையை சீர்செய் வதற்கான காலமாகவே தருகின்றார் என்பதே உண்மையாகும். கடவுளோடு தனித்திருக்கும், காலமாகவும் பயன்படுத்தியிருந்தால் நிச்சயம் அது நாம் வாழ்வை வளப்படுத்தியிருக்கும். கடவுளும் எங்கள் ஒழுங்கீனங்களை, அன்பற்ற வாழ்க்கையை சீர்செய்வதற்கான காலமாகவே தருகின்றார் என்பதே உண்மை யாகும். கடவுளோடு தனித்திருக்கும், கால மாக இதனை மாற்றும்போது தான் கொரோனாவின் அழுத்தங்கள் மத்தியிலும் வாழ்க்கை ஓரளவாவது அர்த்தமுள்ளதாக மாறும். சூழ்நிலை ஏற்படலாம்.

இடைவெளி இன்று நிரப்பப்பட வேண்டும் (Mind your gap)

இன்று நாம் சமூக இடைவெளி பற்றி சுகாதார கட்டுப்பாடுகளில் முக்கிய ஒன்றாகப் பேசப்படுகின்றது. இது ஒரு பௌதீக, உடல் சார்ந்த (Physical) கொரோனாவைக் கட்டுப் படுத்துவதற்கான முதன்மையானதாகக் கடைப் பிடிக்கப்படுகின்றது. இதனால் பாரம்பரியமாக நாம் பின்பற்றிய பழக்க வழக்கங்கள் எல்லாம் மாறிவிட்டன. இது காலத்தின் கோலமாக நோக் கப்பட்டாலும், உண்மையான இடைவெளி உள்ளத்தில் தான் இருக்கின்றது. மன இடை வெளி நீடித்துச் செல்கின்றது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. கடவுளுக்கும் எமக் கும் இடையேயுள்ள இடைவெளி குறையும் போது தான் எமது "மன இடைவெளி" பெரிதாகக் குறைந்ததாகத் தெரியவில்லை. எமது தமிழ்ச் சமூகத்தில், வர்க்க, சாதிய பரம்பரை போன்ற காரணிகளால் நிலவிவரும் சமூக இடைவெளி இன்னும் தொடர்ந்து கவலைக் குரியதே! கடவுளுக்கும் எமக்குமிடையேயுள்ள இடைவெளி குறையும்போது தான் எமது மன இடைவெளிகள் குறையச் சாத்திய முண்டு. இந்த இடைவெளியைக் குறைக்க முயற்சி செய்யாதவை, எத்தனை திருவிழாக் களை, வழிபாடுகளை நடாத்தினாலும் கடவு ளின் பார்வை எம்மேல் இருக்கும். இக் கொரோனாக் காலம் இந்த மன இடை வெளியைக் குறைக்க உதவாத வரை இதுவும் கடந்து போகும்! என்றே வாழ்க்கை மாறி விடும் இன்றைய தொடர்ச்சியான கட்டாய லீவு எம் அகக்கண்களைத் திறக்காத வரை, ஆன்மீகப் பயணம் அரை வேக்காடாகவே போய்க் கொண்டிருக்கும். தொடர்ந்து இருட்டில் கறுத்தப் பூனையைத் தேடிக் கொண்டிருக்கும் வாழ்வாகவே கிறிஸ்தவ வாழ்வு முடிந்து விடும். சமூக இடைவெளியைக் காத்துக் கொண்டு மன இடைவெளியைக் குறைத்து வாழ முயற்சிப்பதே கொரோனா கற்றுத்தந்த பாடம் என்பதை மறுக்க முடியாது. திருவிழாக்களை மீண்டும் கொண்டாடுவதால், வழிபாடுகள் நடைபெறுவதால் எமது ஆன்மீக வாழ்வு மாறி விட்டது என்ற மாயைக்குள் வாழுவதை இடை வெளியை குறைக்கும் காலமாகக் கொரோனா காலத்தை பயன்படுத்தும் போது தான் அடுத் தவர் மீதான அன்பும், இரக்கமும், மனிதமும் மலரத் தொடங்கும் என்பதை எப்போது நாம் உணர்ந்து வாழப்போகின்றோம்.

இந்த கசப்பான உண்மையை உணர்ந்து அதை நோக்கி எமது ஆன்மீகப் பயணம் அமையாத விடத்து எம்மையே நாம் தொடர்ந்து ஏமாற்றிக் கொள்கின்றோம் என்பதே உண்மையாகும்.

கடவுளின் கணக்குத் தொடங்கி விட்டதா! (God's Countdown has started)

இன்று கொரோனாத் தொற்றை விட ஐரோப்பா முழுவதும் பெருவெள்ளம் மக்களின் வாழ்வைப் பாதித்துள்ளது. விஞ்ஞானம், தொழி நுட்பம் பெரிதாக வளர்ச்சி கண்டாலும், காலநிலை பற்றி எதிர்வுகூற முடியுமேயன்றி இயற்கை அனர்த்தங்களைத் தடுத்துவிட முடியாது. இத் தகைய உலகளாவிய உயிரியல் போர், பெரு வெள்ளங்களைக் கண்டு கடவுள் சீக்கிரம் வரப் போகின்றார். என்ற அடிப்படை வாதச் செய்திகள் ஒருபுறமிருந்தாலும், இறைவனை அழிவுகள் நினைவுபடுத்துகின்றன. *(தொடர்ச்சி 10ம் பக்.)*

தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

09

- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

அத்தியாயம் 4

பழைய வாழ்க்கை முறையையும் புதிய ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்

4.1 கிறிஸ்தவத்தை முழுமையாக வாழ முடியாத வேர்களைக் கொண்ட தமிழர்

இப்படியான இறைவணக்கம் செய்வதில் தமிழ் கிறிஸதவர் களுக்கு 300 வருடங்களாக பிரச்சினை இருக்கவில்லை. எதிர்ப்பும் காட்டவில்லை.

ஆனால் 1962-65 நடந்த 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் திருஅவையை பற்றி புதிய விளக்கமும், ஆலயங்களில் கிறிஸ் தவர்கள் கூடி தமிழில் நடாத்தும் வழிபாடுகள், சடங்கு களை பற்றி முன்னேற்றமான விளக்க உரைகளை பெற்றிருக்கின்ற னர். ஆகை யினால் வத்திக்கான் சங்கத்தின் பின், கிறிஸ்தவர் கள் தாங்கள், தனி யான பக்தர்களல்ல, கிறிஸ்துவின் சிடர் குழுக்கள் என்றும், தாங்கள் கூடுமிடத்தை இந்து - சைவ சகோ தரர் போல் ஆலயம் கோவில் என்று அழைப்பதை மீள்பரிசீலனை செய்திருக்க வேண்டும் - கோவிலை சீடரின் கூடம் என மாற்றியிருக்கலாம்.

ஏனெனில் ஒரே வார்த்தையினாலே, அதாவது ஆலயம் அல்லது கோவில் என்று அழைத்தாலும், கிறிஸ்தவர்கள் கருதும் உட்பொருள், மிக வேறுபட்டது. இந்த வேறுபாட்டை உணராததினால் பல பிரச்சினைகள் இன்றும் தொடருகின்றன.

சைவ மதக் கோவில்கள் தனி மனிதர்கள் அல்லது குடும் பத்தினரால் கட்டப்பட்டு, அவர்களுக்கே சொந்தமாயின. அவர்களினால் பராமரிக்கப்பட்டு நடாத்தப்படும் கோவில்களில் அழைக்கப்பட்ட பிரா மணக் குருக்கள் சமஸ்கிருத மொழியில் வழிபாடுகளை நடத்தினர். இந்துக்கள் சமூகமாகத் திரு விழாக்களை ஒழுங்குபடுத்தி ஆடம்பர மாகக் கொண்டாடுவர். பக்தர்களை வழிநடத்துவதில் பூசாரிமாருக்கு அதிகாரம் ஏதும் இருந்ததில்லை. பக்தர்களும் புனித மூலஸ்தானத் திற்குள் பிரவேசிக்காது ஆலய வாசலில் நிற்க, பூசாரியார் மாத்திரம் உட்பிரவேசித்து பலி ஒப்புகொடுப்பார்.

ஆனால் ஆலய சொந்தக்காரர் பராமரிக்கிறவர்களாக பூசாரியி லும் பார்க்க கூடின பொறுப்புள்ளவராக நடந்து கொள்வர்.

இந்த உணர்வும் போக்கும் தமிழ் கிறிஸ்தவர்களிலும் தொடர்ந்து இருக்கின்றது. அத்துடன் மதபோதகர்களின் காலத்தில் சாதிக் கொரு கோவில் என்ற பிரிவினைகளும் இருந்தன. இதன் காரணமாக, சில தமிழ் கிறிஸ்தவர்கள் இன்றும் குடும்பம், சாதி என்ற அடிப்படை யில் மற்றைய கிறிஸ்தவர்களுக்குரிய உரிமைகளை எதிர்க்கின்றனர்.

4.3 இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்களின் ஆலயங்களுக்கும் வேற்றுமையான பண்புகள்

இப்படி இருக்கிறதென்பதை, நேர காலத்துடன் புரிந்து கொள்ளாதது ஆரம்ப கிறிஸ்தவர்களின் தவறு. ஐரோப்பிய மத போதகர்கள் இந்து - சைவ ஆலயங்களின் நீண்ட சரித்திரத்தையும் பொருளையும் தெரிந்திருக்கவில்லை. ஆகையால் ஆரம்ப தமிழ் கிறிஸ்தவர்கள், தாங்கள் ஆராதனை வழிபாடுகள் நடத்துமிடத்தை, இந்து - சைவர்கள் போல் கிறஸ்தவ ஆலயம் அல்லது கோவில் என்று அழைத்தனர்.

கிறிஸ்தவர்களின் முன்னோடியான இஸ்ரவேல் மக்களின் யூத மதத்தின் ஜெருசலேம் ஆலயம், இறைவனின் இருப்பிடமாக கணிக்கப்பட்டது. இது இந்து - சைவ மக்கள் தமது ஆலயங்களை பற்றி வைத்திருக்கும் கருத்தை ஒத்தது.

ஆனால் கிறிஸ்தவ திரு அவைகள், யூத இயேசுவினால் ஆரம்பமாயிருந்தும், தமது ஜெருசலேம் ஆலயத்தையும் இஸ்ரவேலர் அதற்கு கொடுத்த தனிப்பெரும் முக்கியத்துவத்தையும் உணர்ந் திருந்தும், யூத கிறிஸ்தவர் ஆலயத்தை பற்றி யூதர் வைத்திருந்த கருத்தை தொடர்ந்து வைத்திருக்கவில்லை.

இயேசுவின் விண்ணேற்றத்தின் பின் நடந்த ஆவியா- ரின் பொழிவை தொடர்ந்து, சீடர்கள் சிறு குழுமங்களாக வீடுகளில் கூடி இயேசுவின் போதனைகளை நினைவு கொள்வதிலும், அவர் தமது பாடுகள் - மரணம் நினைவாக ஏற்படுத்திய விருந்தையும் நினைவு கூர்ந்தனர். தமக்கென்று ஜெருசலேம் ஆலயம் போன்று, புதிய ஆலயத்தை கட்டவுமில்லை நிர்ணயிக்கவுமில்லை, தேவையும் இருக்கவில்லை.

கிறிஸ்தவர்கள் கூடுமிடத்து பின்னணியும் பொருளும் வேறு பட்டது. கிறிஸ்தவம் இஸ்ரவேல் - யூத மக்களின் யூத மதத்திலிருந்து தோன்றியது. இவர்களும் இறைவனின் பிரசன்னத்தை ஆரம்பத்தில் படைப்புக்களின் வியப்பில் அனுபவித்தனர். இருந்தும் தங்களின் விடுதலை பயணத்தில் இறைவன் தம்மோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தனர். ஜெருசலேம் தேவாலயத்தை இறைவனின் இருப்பிடமாக சித்தரித்து, இறைவனுக்கு நன்றி - வணக்கம் செலுத்தும் ஆலயமாக்கிக் கொண்டனர்.

(தொடரும்...)

இணைந்து பயணிக்கும் திருச்சபையாக உருவெடுக்க இணைந்து பயணிப்போம்!

2023 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் 16வது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றத்தின் தனிச் சிறப்பும், சிறப்பம்சங்களும்!!

மாமன்றத் தயாரிப்புக் கையேட்டுச் சுருக்கம்

ஒருங்கிணைந்த பயணம் (Path of Synocality)
ஒன்றிப்பு (Communion)
பங்கேற்பு (Participation)

நற்செய்தி அறிவிப்பு (Mission)

2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் சாதாரண மாமன்றத்திற்கான தயாரிப்பு, உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும் 2021 அக்டோபர் : மாதம் 17ஆம் திகதியிலிருந்து முதல் நிலைத் தயாரிப்புப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைப்பு, இம்மாமன்றம் எந்த இலக்குடன் எப்படித் தயாரிக்கப்பட்டு, 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிறைவுவிழா நடைபெற உள்ளது. இம்மாமன்றத்தின் தனிச் சிறப்புகள் எவை என்பது பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியமாகும்.

"இணைந்து பயணிக்கும் திருச்சபை - ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு" என்ற மையக் கருத்துடன் இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது. இந்த உலக ஆயர்கள் மாமன்றம் 'கனவுகளை விதைத்தல்', 'இணைந்து பயணித்தல்' ஆகிய இரண்டு அடித்தளங்களைக் கொண்டு நடைபெறவுள்ளது. கனவுகளை விதைத்தல் என்பது, மக்களுடைய உள்ளங்களில், இளைஞர் இளம் பெண்களின் உள்ளங்களில் ஆழமான எதிர்காலக் கனவுகளை விதைத்து, அவர்களின் உள்ளங்களில் விசுவாசத்தைப் பதித்தல் என்று புரிந்து கொள்ளலாம். இணைந்த பயணித்தலை - அருள்நிலையினர் (திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள்) பொது நிலையினர், குழந்தைகள், முதியோர், ஏழை - பணக்காரர்கள், மாற்றுத்திறனாளிகள், புறந்தள்ளப்பட்டோர், அகதிகள் என்று உலகிலுள்ள அனைத்து தரப்பினர்களுடனும், ஏன் பிற சமயத்தினர், பிற சபையினர் அனைவருடனும் இணைந்து இயேசுவின் இறையாட்சிப் பாதையில் பயணித்தல், கனவுகளை விதைத்தல், விசுவாசத்தை ஆழப்படுத்துதல் என்று புரிந்து கொள்ளலாம். இந்த அடித்தளத்தில் தான் 16வது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றம் நடைபெறப் போகிறது.

3. சிறப்பு ஆயர்களின் மாமன்றம் இது கண்டத்தின் அளவில் (Continent Level) பிரதேச அளவில் நடைபெறுகின்றன.

உலக ஆயர்கள் மாமன்றம் என்பதன் பொருள் :

உலக ஆயர்கள் மாமன்றம் பற்றிப் புரிந்து கொள்ள நமக்கு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றிய அறிவு தேவை. கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பத்தை, பெரிய மாற்றத்தை, புதிய பார்வையை, புதிய சிந்தனையை, புதிய வழிமுறைகளை வகுத்துத்தந்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம். இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் 1962இல் தொடங்கி 1965 வரை நீண்ட காலம் நடைபெற்ற ஒரு மாபெரும் திருச்சங்கமாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் கலந்து கொண்டவர்கள் இச்சங்கத்தின் தீர்மானங்கள், வரைவுமுடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட இது போன்ற மாமன்றங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று உணரப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் போல அடிக்கடி ஒரு பெரிய சங்கத்தைக் கூட்டுவது இயலாத காரியம் என்பதால், உலக ஆயர்களின் பிரதிநிதிகள் அவ்வப்போது கூடி விவாதிப்பதற்கான அரங்கம் வேண்டும். அது ஒரு நிரந்தரத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது உலக ஆயர்கள் மாமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த அடிப்படையிலான் ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கங்கள் என்ன என்கிறீர்களா? ஒன்று, இறை நம்பிக்கையை (Faith) வளர்த்தல். இறைமக்களிடையே இறை நம்பிக்கையே வளர்த்து ஆழப்படுத்துவது. விசுவாசிகளை இறையச்சம், இறையுணர்வு, இறை நம்பிக்கை மிக்கவர்களாக உருவாக்குவது. அதைப் பற்றி விவாதிக்கவும், சிந்திக்கவும், அதற்கான வழிமுறைகளை வரைந்து வழங்கவும், வகுத்து வழங்கவும் முனைவது. இரண்டாவதாக, அறநெறிகளை, ஒழுக்க நெறிகளை பாது காத்தல் காலத்திற்கேற்ப அவைகளைப் புதுப்பித்து மேம்படுத்துதல். மூன்றாவதாக திருச்சபையின் ஒழுங்குகள், சட்டதிட்டங்களின் விதிமுறைகளை பாதுகாத்தல், காலங்களுக்கேற்ப அவைகளைப் புதுப்பித்துக்கொள்வது. நான்காவதாக, உலகிற்கு செவிமடுத்தல், குறிப்பாக காலத் தின் அறி குறிகளை துளாவியறிதல், அதற்கேற்ப திருஅவை தன்னைப் புதுப்பித்துக் கொள்வதும், உலகிற்கு வழிகாட்டுவதும் ஆகும். இந்த நான்கு நோக்கங்களுடன் உலக ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த உலக ஆயர்கள் மாமன்றங்களில் மூன்று வகைகள் உள்ளன.

1. சாதாரண ஆயர்கள் மாமன்றம். இதுவரை இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் 15 ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

2. தேவைக்கேற்ப அசாதாரண ஆயர்கள் மாமன்றம் நடைபெறும். இது வரை மூன்று அசாதாரண ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிக்காலத்தில் (2013இல் திருந்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார்). இவரது வரவு திருச்சபையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல! மக்கள் திருச்சபையாக, ஏழைகளின் திருச்சபையாக, ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்டவர்களின் திருச்சபையாக, இன்றும் மலர்ந்து கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். திருந்தந்தை பிரான்சிஸ் இந்த இறையாட்சிப் பாதையில் பயணிக்க பல சுற்றுமடல்கள், அப்போஸ்தலிக்க திருமடல்கள் எழுதி வழி நடத்தி வருகிறார்.

திருத்தந்தை அன்பானவராக , இரக்கமிக்கவராக, பரிவுமிக்கவராக, மக்கள் மீது தனிக்கரிசனை கொண்டவராக, அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்துகின்றவராக, தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். இவரது பணிக்காலத்தில் மிக முக்கியமான ஆயர்கள் மாமன்றங்கள் நடத் துள்ளன குறிப்பாக. சாதாரண ஆயர்கள் மாமன்றங்கள் நடத்துள்ளன: "குடும்பம்" பற்றிய ஆயர்கள் மாமன்றம், "இளையோர்" பற்றிய ஆயர்கள் மாமன்றம் நடந்துள்ளது. அதுபோல, ஒரு அசாதாரண ஆயர்கள் மாமன்றத்தையும் நடத்தியுள்ளார். குடும்பத்தைப் பற்றிய அசாதாரண ஆயர்கள் மாமன்றம் நடந்துள்ளது. சிறப்பு ஆயர்கள் மாமன்றம் - அமேசான் பகுதியில் பணி புரியும் ஆயர்கள் மாமன்றமும் நடந்தது. அதன் தொடர்ச்சியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிந்தனையில் உருவான சாதாரண ஆயர்கள் மாமன்றம் தான் - நடைபெறவுள்ள இந்த 16வது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றமாகும்! 2021 அக்டோபரில் தொடங்கியுள்ள இந்த உலக ஆயர்கள் மாமன்றம் 2023 அக்டோபர் மாதத்தில் நிறைவடையும்.

இம் மாமன்றத்திற்கான மையச் சிந்தனையாக - "இணைந்து பயணிக்கும் திருஅவையாக - : ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு" சேர்ந்து, ஒருங்கிணைந்து, நன்றாக, தோழமையுடன், நட்புறவுடன் பயணிக்கும் திருஅவையாக நம் கத்தோலிக்கத் திருஅவை மலரவேண்டும், வளர வேண்டும், அப்படிப்பட்ட திருஅவையில் ஒன்றிப்பு, பங்கேற்பு, தொடர்ச்சியாக நற்செய்தி அறிவிப்பு நிகழ வேண்டும். அதாவது, இறையாட்சி பற்றிய செய்தியை, சிந்தனையை எல்லோருக்கும் அறிவிப்பதும், வாழ்வதும் ஆகும். இந்த மையச் சிந்தனையோடும், பார்வையோடும், இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெற உள்ளது. மறைமாவட்ட அளவில் இம்மாமன்றங்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு

இந்த உலக ஆயர்கள் 16வது மாமன்றத்தின் மையக் கருத்தாக உள்ள மூன்று வார்த்தைகள். ஒன்றிப்பு (Communion), பங்கேற்பு (Participation), நற்செய்தி அறிவிப்பு (Mission) இம்மூன்று வார்த்தைகளின் பொருளைப் புரிந்து கொள்வோம்.

ஒன்றிப்பு

மூவொரு இறைவனின் அன்பிலும், ஒன்றிப்பிலும், பங்கெடுப்பது. மூவொரு கடவுள் எப்படி ஒன்றாய், நன்றாய் ஒருங்கிணைந்து சிந்தனையிலும் செயலிலும் இணைந்துள்ளனரோ, அதுபோல, திருச்சபையில் நாம் ஒன்றித்திருப்பது.

பங்கேற்பு (Participation)

எந்தவித வேறுபாடுகளுமின்றி, அது சாதி, மதம், பிராந்தியம் மொழி, உயர்வு - தாழ்வு என்ற எந்த வேறுபாடும் இன்றி - மக்கள் அனைவரும் ஒன்று சேர்தல், இணைந்து பங்கேற்றல் குறிப்பாக விளிம்பு நிலை மக்கள், சாதாரண மக்கள், ஏழை மக்கள், துன்புறும் மக்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்கள், அகதிகள் இவர்களின் பங்கேற்பிற்கும் முக்கியத்துவமளித்தல். It's an inclusive participation.

நற்செய்தி அறிவிப்பு (Mission)

நற்செய்தி அறிவிப்பு என்கிறபோது, இது மனித வாழ்வின், சமூக வாழ்வின் அத்தனை அதியாவசியங்களையும் உள்ளடக்கியது ! ஆன்மீக சமூக, பொருளாதார, அரசியல், புவியியல், மற்றும் விளிம்பு நிலையிலுள்ள அனைவருக்கும், வாழ்வை, வளர்சியை வழங்கக்கூடிய செய்தியே நற் செய்தி என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

ஆக ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பது என்பது ஆழமாக, பரந்துபட்ட பார்வையில் இம்மாமன்றத்தில் அலசி ஆராயவும், புரிந்து கொள்ளவும், வாழ்வாக்கப்படவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

உலக ஆயர்கள் மாமன்றத்தின் அணுகுமுறை

இந்த உலக ஆயர்கள் மாமன்றத்தின் அணுகுமுறை எப்படி இருக்கும்? என்று கேட்டால், இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தைத் தொடக்கி வைத்தபோது - இம் மாமன்றத்தின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அழகாக விளக்கினார்கள் "எல்லோரும் சந்தித்தல், கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல், செவி மடுத்தல், இறுதியாகத் தேர்ந்துதெளிதல். இது ஒரு உலகளாவிய இணைந்த பயணம் ஏதோ ஒரு மறைமாவட்டத்துக்க மட்டுமல்ல. உலகம் முழுவதும்! கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, பிற மத மக்கள், பிற சபை மக்களோடு சேர்ந்து தொடங்குகிற ஒரு பயணம். இது ஒரு மாற்றத்துக்கான பயணம், வளர்ச்சிக் கான பயணம். ஒரு தோழமைப் பயணம்" என்று திருத்தந்தை கூறினார்.

இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான சின்னம் (Logo) மாமன்றத்தில் யாரெல்லாம் பங்கெடுப்பார்கள் என்பது அடையாளப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது! எல்லோரும் பங்கெடுப்பார்கள், பொதுவாக ஆயர்கள் மாமன்றங்களில் ஆயர்களின் பிரதிநிதிகளாக ஆயர்களே பங் கெடுப்பார்கள். ஆனால், இம்மாமன்றத்தில் குழந்தைகள், இளைஞர்கள், நடுத்தர வயதினர் மற்றும் முதியவர்கள், ஆண்கள், பெண்கள், பெற்றோர்கள், தம்பதியர்கள், பொது நிலையினர், துறவிகள், மாற்றுத்திறனாளிகள், ஏன் பிற சமய மற்றும் பிற சபையினர் என்று அனைவரும் இணைந்து பயணிக்கும் திருச்சபையாக கத்தோலிக்க திருஅவை உருவெடுக்க வேண்டும் என்ற இலக்குடன் துளாவி ஆராய்ந்து. தியானித்து. வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட உள்ளன.

மாமன்றம் 3 பகுதிகளாக நடைபெறும்

16வது உலக ஆயர்கள் மாமன்றம் மூன்று பகுதிகளாக நடைபெற வுள்ளது! This Synodal Journey will be under taken in three phases. முதல் பகுதி - தலத்திருச்சபையை கவனத்தில் கொண்டு மறைமாவட்ட அளவி லும், ஆயர்கள் பேரவைகள் அளவிலும், நடைபெறும். இரண்டாவது பகுதி - கண்டங்கள் அல்லது பிரதேசங்கள் அளவில் நடைபெறும். மூன்றாவது பகுதி - வத்திக்கானில் உலக அளவில் நடைபெறும்.

ஒவ்வொரு பகுதி (Phase) முடியும் போதும், ஒரு வரைவு Draft மேற்கொள்ளப்படும். இந்த வரைவானது மீண்டும் கலந்தாய்வு செய்யப்படும். அதன் பின் மூன்றாவது நிலை அல்லது பகுதியில் உலக ஆயர்கள் விவாதிக்க அனுப்பப்படும். இம்மாமன்றத்தின் நிறைவு வரைவு ஒரு சுற்றுமடலாகவோ, அப்போஸ்தலிக்க திருத்தூது மடலாகவோ வெளிவரும். 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஏழு நோக்கங்கள்:

இந்த 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கங்களாக நான் ஏழு நோக் கங்களை முக்கியமான நோக்கங்களாகப் பார்க்கின்றேன் :

1. தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் இறையன்பின் சாட்சிகளாக இன்றைய உலகில் வாழத் தரப்படும்
அழைப்பை உணரும் தருணமாக இம்மாமன்றம் இருக்கும்.

2. அனைவரையும் உள்ளடக்கிய (Inclusive) அனைவரும் பங்கேற்கும் (Participatory Church). திருஅவையாக உருவாவதும் வளர்வதும் எப்படி? என்று விவாதிக்கப்படும்.

3. இறைச் சமூகமாக கிறிஸ்தவர்களின் நலனுக்காகவும், மானுட சமூகத்தின் நலனுக்காகவும் உழைப்பதற்குக் கடவுள் தர்துள்ள, தந்து கொண்டிருக்கின்ற கொடைகளை அடையாளம் காண்பது. கடவுள் தந் துள்ள கொடைகள், வழிகாட்டுதல்களைக் கண்டுணரும் தருணமாக இந்த மாமன்றம் அமைபும்.

4. எல்லோரும் நலமாக வாழக்கூடிய ஒரு அழகான, நலமான உலகைக் கட்டி எழுப்புவது எப்படி? அந்தக் கட்டியெழுப்பும் பணியில் எல்லோரும் பங்கெடுப்பது எப்படி ? என்கின்ற வழிமுறைகளைக் கண்டுபிடிக்கும் தருணமாக மாமன்றம் இருக்கும்.

5. திருச்சபை என்னும் இறைமக்கள் சமூக அமைப்பினுள் அதி காரம், பொறுப்புணர்வு, நிர்வாக அமைப்புக்கள் குறித்த செயற் பாடுகள் பற்றி ஆழமாக ஆய்ந்து, நற்செய்தியின் ஒளியில் வேரூன்றாத அதிகாரத்தையும், நிர்வாக அமைப்புக்களையும் மாற்றி அமைக்க என்ன செய்வது என் பது பற்றிக் கலந்தாய்வு செய்வதற்கான தருணமாக இம்மாமன்றம் அமையும்.

6. சமூக உரையாடல், சகோதரத்துவத்தை ஊக்குவித்தல், மக்களாட்சியைக் கட்டியெழுப்புதல், ஒப்புரவை ஏற்படுத்துதல், உரையாடல் போன்றவற்றில் நமது கிறிஸ்தவ சமூகத்தின் பங்கேற்பை அதிகரித்தல்.

7. கிறிஸ்தவ குழுக்கள் மற்றும் சபைகள், பிற சமயங்கள், மக்கள் இயக்கங்கள் இவைகளுக்கிடையிலான உறவுகளைப் புதுப்பித்தல்.

இந்த ஏழு நோக்கங்கள் அல்லது இலக்குகளை நோக்கிய, இம்மாமன்றத்தின் மூன்று பகுதிகளில் (Three Phases) தயாரிப்புகள் அமைவதற்கு உதவியாக இரண்டு வழிகாட்டி ஏடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒன்று தயாரிப்பு ஏடு (Preparation Document and Guide) இரண்டு , தயாரிப்புக் கையேடு (Hand Book) இந்த இரண்டு ஏடுகளும் வத்திக்கான் இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

இந்தத் தயாரிப்புக் கையேட்டில் காணப்படும் கருப்பொருட்கள்

திருத்தந்தை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ள 16 வது உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்பு கையேட்டில் - இம்மாமன்றத் தயாரிப்பானது மறைமாவட்ட அளவிலும், ஆயர்கள் பேரவை அளவிலும் எப்படித் தயாரிக்க வேண்டும், தயாரிப்புக்கான மையப்பொருட்கள், தயாரிப்பு வழிமுறை, மற்றும் அணுகுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வழிகாட்டும் கருப்பொருட்கள் பத்து

1. தோழர்களாக உடன் பயணித்தல்
2. திறந்த மனதோடு செவிமடுத்தல்
3. சுதந்திரமாகவும் அன்பாகவும் உரையாடுதல்
4. இறையனுபவத்தைக் கொண்டாடுதல்
5. மறைபணியில் பொறுப்புடன் பங்கேற்றல்
6. திருச்சபையோடும் சமூகத்தோடும் உரையாடுதல்
7. பிற கிறிஸ்தவச் சபைகளுடன் உரையாடுதல்
8. அதிகாரப் பரவலாக்கம் மற்றும் பங்கேற்பு
9. தேர்ந்துதெளிதல், முடிவெடுத்தல்
10. இணைந்து பயணித்தல் (Journaling Together)

தந்தை தஞ்சை டோமி
தஞ்சை மறை மாவட்டம்

இந்தப் பத்துக் கருப்பொருட்களும், மறை மாவட்ட அளவிலான, ஆயர்கள் பேரவைகள் அளவிலான தயாரிப்புக் கூட்டங்களில், கலந்தாய்வு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த 16 வது உலக ஆயர்கள் மாமன்றத்துக்கான தயாரிப்பில், நமது இணைந்து பயணிக்கும் தயாரிப்புப் பயணத்தில் சில தடைகள் உள்ளதையும் திருத்தந்தை வெளிக்கொணர்ந்துள்ளார். குறிப்பாக மூன்று தடைகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஏனெனில், நாம் அனைவரும் இந்தத் தயாரிப்புப் பயணத்தில் நேர்மையாகவும், உண்மையாகவும், தோழமையோடும், ஈடுபாட்டுடனும் பங்கேற்க ஒன்றாக நடைபெற வேண்டும் என்று திருத்தந்தை விரும்புகிறார். நமக்குள்ள தடைகளாக இவை மூன்றும் அமையலாம் என்று திருத்தந்தை முன்மொழிகிறார்.

1. மேலோட்டமான பார்வை (Superficial Outlook) மற்றும் அணுகுமுறை (Approach) எதையும் ஆழமாகச் சென்று விவாதிக்காமல், மேலோட்டமாக சிந்திப்பதும், கருத்தைப் பகிர்வதும் ஆகும். மேலோட்டமாக முடிவுகளையும் மேற்கொள்வது. இது முதல் தடை 1.

2. வெறும் அறிவுசார் பார்வை மற்றும் அணுகுமுறைகளை (Mere Intellectual Outlook and Approach) மட்டும் பின்பற்றுவது. மனிதன் என்பவன் உணர்வு. உணர்ச்சி , அனுபவம் ஆகியவற்றிற்குச் சொந்தக்காரன். இவைகளை இணைத்து சிந்திக்கும் ஒரு முழுமையான பார்வையும் அணுகுமுறையும் தேவை.

3. மக்களை, பங்கேற்பாளர்களை உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்கு இட்டுச்செல்லாத மேதாவித்தனம் மூன்றாவது தடை. அனைவரும் உணர்வுபூர்வமாக மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும் என்று திருத்தந்தை விரும்புகிறார்.

முடிவாக :

மேற்கூறிய குறிப்புகள், கருத்துக்கள், வழிகாட்டல்களின் அடிப் படையில் 16வது உலக ஆயர்கள் மாமன்றம் தொடங்கியுள்ளது. இதே உணர்வுடனும், ஈடுபாட்டுடனும் இந்த மாமன்றத்திற்கான இணைந்த பயணத்தில் அனைவரும் பங்கேற்போம். செவிமடுப்போம், நமது கருத்துக்களை எடுத்துக் கூறுவோம், அனுபவங்களையும் சிந்தனைகளையும் பகிர்வோம், சேர்ந்து உரையாடுவோம், இணைந்து பயணிப்போம்! ஒன்றிப்பும், ஈடுபாடும், நற்செய்தி அறிவிப்புப் பணியும் நிறைந்த, இணைந்து பயணிக்கும் திருச்சபையாக உருவெடுக்கச் செபிப்போம்!

இறைவனின் குரலுக்கும், இறைமக்களின் குரலுக்கும் செவிமடுக்க மாமன்றத் தயாரிப்புக் காலத்தில் திருத்தந்தை அழைப்பு

அகில உலகத் திருஅவை, ஒருவர் மற்றவருக்குச் செவிமடுப்பவர்களாக, புதுப்பிக்கப்பட்ட மறைப்பணி அணுகுமுறைகளில் படைப் பாற்றலுடன் செயற்படுமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

2023ம் ஆண்டில் இடம்பெற உள்ள ஆயர் மாமன்றத் தயாரிப்புக்கு உதவியாக, மூன்று முக்கிய தலைப்புகளையும், இரண்டு பரிந்துரைத் தலைப்புகளையும் முன்வைத்துள்ளார்.

அகில உலகத் திருஅவையில் இடம்பெறும் ஆயர் மாமன்றக்கூட்டம், சில அமைப்புமுறை மாற்றங்களுக்கும், திருமுழுக்குப்பெற்ற அனைவரின் குரலுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதை நோக்கம் கொண்டதாக இருக்கும் என அதில் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

திருஅவை அங்கத்தினர்கள், செவிமடுத்தலில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தகைய செவிமடுத்தல், கலந்துரையாடலையும், தெளிந்து தேர்தலையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் எனவும், இறைவனின் குரலுக்கு செவிமடுக்கும்போது, அதனோடு இணைந்து இறை மக்களின் குரலுக்கும் நாம் செவிமடுக்கவேண்டும் எனவும் விண்ணப்பித்துள்ளார்.

நம்மிடையே காணப்படும் வேறுபாடுகள் பிரிவினைக்கு இட்டுச் செல்லாமல் இருக்கும் வலகையில், செபம், கலந்துரையாடல், தெளிந்து தேர்தல் போன்றவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக, தூய ஆவியாரின் படைப்பாற்றல் மிக்க பெரும் அன்பின் செயற்பாடுகளைப் பங்கு ரீதியாகவும் மறைமாவட்ட ரீதியாகவும் இம் மாமன்றத் தயாரிப்புக் காலத்தில் முன்னுரிமைப்படுத்திச் செயற்படுத்துமாறு வேண்டியுள்ளார்.

எழுந்து நிமிர்ந்து நில்
36வது இளையோர் உலக நாள் மையப்பொருள்

'கிறிஸ்து அனைத்துலக அரசர்' திருநாள், இவ்வாண்டு முதல் முறையாக, இளையோர் உலக நாளாகவும், மறை மாவட்ட அளவில் சிறப்பிக்கப்படுகிறது.

இளையோர் உலக நாளை உருவாக்கிய திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்களின் விருப்பப்படி, 1986ம் ஆண்டு முதல் புனித வாரத்தின் முதல் நாளான குருத்தோலை ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்டு வந்த இளையோர் உலக நாள், இவ்வாண்டு முதல், கிறிஸ்து அரசர் திருநாளன்று சிறப்பிக்கப்படும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சென்ற ஆண்டு அறிவித்தார்.

2020ம் ஆண்டு மறைமாவட்ட அளவில் சிறப்பிக்கப்பட்ட 35வது இளையோர் உலக நாளுக்கு, "இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திரு" (லூக்கா 7:14) என்ற மையக்கருத்தையும், இவ்வாண்டு சிறப்பிக்கப்படும் 36வது இளையோர் உலக நாளுக்கு, "எழுந்து நிமிர்ந்து நில். நீ கண்டதுபற்றி சாட்சியாக விளங்க உன்னை ஏற்படுத்துகிறேன்" (காண்க. தி.ப. 26:16) என்ற மையக்கருத்தையும், திருத்தந்தை தெரிவு செய்திருந்தார்.

2022ம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் 37வது இளையோர் உலக நாள் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருந்தாலும் கோவிட் பெருந்தொற்று உருவாக்கிய நெருக்கடிகளை மனதில் கொண்டு, இந்த இளையோர் நாள் நிகழ்வுகள், 2023ம் ஆண்டுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

பாதுகாவலன் ஆண்டு சந்தா - 2021

பாதுகாவலன் பத்திரிகையின் 2021 ஆம் ஆண்டுக் கான வருடாந்த சந்தாப் பணம் செலுத்தாது பல வாசகர்கள் உள்ளனர். பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இப்பத்திரிகையைப் பிரசுரித்து வருகின்றோம். தயவு செய்து இவ்வாண்டுக்கான சந்தாவை உடன் செலுத்தி எம் பணிக்கு உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

- ஆசிரியர்

காவலன் கலசம்

நூற்றாண்டு வளர்ச்சியில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

கார்த்திகை மாதம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு எம்முடன் வாழ்ந்து, பல இன்ப நினைவலைகளை எமக்கு விட்டுச் சென்ற, எம் உறவுகள், நண்பர்கள், போன்ற பலரை நினைவு கூரும் காலம். இன்று தேசிய ரீதியிலும் தம் இன்னுயிரை இனத்திற்காக, தாய்நாட்டிற்காக தியாகம் செய்த பல உள்ளங்களையும் நினைவு கூரும் காலமாக மாறியுள்ளது. இவ்வுலகில் பிறந்த அனைவருமே ஒருநாள் இவ்வுலகை விட்டுப் பிரிய வேண்டுமென்பது எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிஜம், ஆயினும் அனைவருமே மனிதர் மனதில், வரலாற்றில் நினைவு கூரப்படுகின்றவர்களாக இருப்பதில்லை. தமக்கென வாழாது பிறருக்காக, சமூகத்திற்காக, நாட்டிற்காக, இறைவனுக்காக தம்மை அர்ப்பணித்து இவ்வுலகில் நீங்காத நினைவுகளை விட்டுச் சென்றவர்கள், என்றுமே மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

அந்த வகையில் கத்தோலிக்கர்களாகிய நமக்கு மரணத்தின் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படு வதில்லை. இவ்வுலகில் வாழும் நாம் பயணம் செய்யும் வேளை பல மனிதர்களை, அனுபவங்களை, வெற்றி தோல்விகளை, இன்ப துன்பங்களை, சவால்களை எதிர்நோக்குகின்றோம். இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து எம்மை உருவாக்குகின்றது. இவை யாவற்றிலும் இறைவனின் கரம் எம்மை வழிநடத்துகின்றது, என்று நம்பி அவர் திருவுளத்திற்கு எம்மைக் கையளித்து அவர் விருப்பப்படி நடக்கும் போது எம் வாழ்வு சுகமாக இருக்கும். இறைவன் எம்மை ஒரு சமூகத்தில் வாழ அழைப்பு விடுத்தது, மற்றவர்களுக்கு எம் வாழ்வு நன்மை பயக்கத்தக்கதாக இருக்கும் படியே. அந்த வகையில் வரலாற்றில் பலர் தம் வாழ்வால் பலருக்கு ஒளி கொடுத்து, நல்வாழ்வு வழங்கி, எம் வாழ்வில் அழியா முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளனர். திரு அவையின் வரலாற்றில் கிறிஸ்துவின் வாழ்வினை அடியொட்டி வாழ்ந்து அவர் அரசைப் பரப்ப, பல வழிக-ளிலும் தம் வாழ்வினை அர்ப்பணித்து, பல நாடுகளில் தமக்கே உரித்தான பாணியில் பலருக்கு சேவை செய்த, பல்லாயிரக்கணக்கான தியாகச் செம்மல்கள் புனிதர்களாக இன்று உயர்த்தப்பட்டுள்ளனர்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினை நி-றுவி, மறைபரப்பு நாடுகளில் இளைஞர்களிற்குக் கல்வி புகட்டுவதன் மூலம் கிறிஸ்தவ மதிப்பீடுகளை அவர் உள்ளங்களில் விதைத்திட ஐரோப்பிய நாட்டில் பிறந்து, அக்கலாசாரத்தில் வளர்ந்து, கிறிஸ்தவ சமயத்தில் வேரூன்றி, இறை விசுவாசத்தில், அன்பில் வளர்ந்து, உயர்தரக் குடும்பத்தில் பண்பாய் வளர்க்கப்பட்ட ஆங்கிலப் பெண்ணான சோபியின் வாழ்வு, பணி, அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக அமைந்தது. கார்த்திகை மாதம் 19ம் திகதி அவரது இறப்பின் 115ம் ஆண்டின் நினை வினை நாம் நினைவு கூருகின்றோம். கிறிஸ்தவ இளம் பெண்ணான இவர் தன் தங்கை மேரி ஆனுடன் உண்மையான விசுவாச ஒளியைப் பெற்றவராக, கத்தோலிக்க சமயத்தில் திருமுழுக்குப் பெற்று, படிப்படி யாக துறவற வாழ்வில் தன்னை அர்ப்பணித்து, மறைபரப்பு நாடுகளில் பணியாற்றும் ஆர்வத்தினால், இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் சேவை செய்தார். இங்கு இளம் பெண்களிற்கு கல்வியினூடாக கத்தோலிக்க மதிப்பீடுகளை, அவர்களின் உள்ளத்தில் விதைத்திடவும், ஆழ்ந்த செப அனுபவத்தினை வழங்கிடவும், அப்போஸ் தலிக்க கார்மேல் சபையினை உருவாக்க ஆவல் கொண்டார்.

எனவே தான், அவர் மிகவும் அன்பு செய்த தன் துறவற சபையினை, இறைவன் திருவுளத்திற்கேற்ப, திரு அவையின் அனுமதியுடன் விட்டு விலகி, ஆழ் நிலைத்தியான கார்மேல் சபையில் இணைந்து வாழ்ந்து செப அனுபவத்தைப் பெற்று, அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினை நிறுவினார். இம்மாபெரும் பணியினை நிறைவேற்ற அவர் கொடுத்த விலை மிகப்பெரிது, பல சவால்கள், அவமானங்கள், தோல்விகள் இவர் வாழ்வில் பெரும் பகுதியாக இருந்தது. இவற்றின் மத்தியிலும் அவரின் இறை விசுவாசம் தளரவில்லை. இறைவன் திருவுளம் என்பதை ஏற்றுக்கொண்டு இறுதி வரையிலும் அவர் போராடினார். தான் உருவாக்கிய அப்.கார்மேல் சபையுடன் எந்தவித தொடர்பினையும், ஏற்படுத்திக் கொள்ள முடியாத அவரது வாழ்க்கை, மிகவும் வேதனைக்குரியது. தனது பிள்ளைகளின் பணி முற்றுப் பெற்று விட்டது, என எண்ணி பெரும் வேதனையில், கார்மேல் கன்னியர் இல்லத்தில், வயது முதிர்ந்திருந்து வாழ்ந்து கொண்டிருந்த வேளையில், இந்தியாவில் அக் கார்மேல் சபை அருட்சகோதரிகளின் பணி வேரூன்றி, பல கிளைகளைப் பரப்பி வருகின்றது, என்பதனை அறிந்த அன்னை வெரோணிக்காவின் ஆனந்தம் சொல்ல முடியாது. இறைவன் அவரது ஆழ்ந்த விசுவாசத்தையும் அன்பையும் கண்டுகொண்டு இவ்வினிய அனுபவத்தையும், ஆறுதலையும் அவருக்கு

வழங்கினார். தனது சபையுடன் அறுந்திருந்த உறவினை புதுப்பிக்கும் நிகழ்வாக, இந்தியாவிலிருந்து ஐரோப்பா சென்ற அன்றைய சபைத் தலைவி, அவர் உருவாக்கி அனுப்பி வைத்த மகள், அவரைச் சந்தித்த இனிய அனுபவமும் அவர் வாழ்வில் நிறைவினைக் கொடுத்தது. தனது சபையின் வளர்ச்சி கண்ட அன்னையவர்கள், இறைவன் புகழ்பாடித் தன் இறுதிக் காலத்தை அவருக்கு நன்றி கூறிப் புகழ் பாடுவதிலும், தன் பிள்ளைகளின் வளர்ச்சிக்காகவும் வேண்டுவதிலும் செலவழித்தார்.

தன் வாழ்வினை உருக்கி ஒளி கொடுத்த இத்தீபம் பிரகாசமாக ஜொலித்து இறுதியில் 1906ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16ம் திகதி, இவ்வுலகில் தன் பயணத்தை இனிதே நிறைவு செய்து விண்ணுலகம் சென்றது. அப். கார்மேல் சபை நிறுவுனரான வணக்கத்திற் குரிய அன்னை வெரோனிக்காவின் வாழ்வின் உண்மைத்தன்மையினையும், இறை சித்தத்திற்கேற்ப அவர் வாழ்ந்த புனிதத்தன்மையையும் ஏற்றுக்கொண்டு, திருஅவை இன்று அவரை புனிதர் பட்டத்தின் முதல் படியான வணக்கத்திற்குரியவர், என்பதனைப் பிரகடனப் படுத்தியுள்ளது. அவரால் நிறுவப்பட்ட இச்சபை இந்தியா வில் 150 வருட நிறைவைக் கொண்டாடியுள்ளது. இலங் கையில் அப். கார்மேல் சபை தடம் பதித்து 1922 ஆம்

அருட் சகோதரி
பவளராணி ஞானப்பிரகாசம்.அ.கா

ஆண்டு மாசி மாதம் நூற்றாண்டு விழாவினை நினைவு கூர்கின்றது. 1867ல் பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட அப். கார்மேல் துறவற சபை 1870 கார்த்திகை மாதம் 19ம் திகதி இந்தியாவில் மங்களூர் எனும் இடத்தில் தன் பணி-யினை ஆரம்பித்தது. 151 ஆண்டு பணியினைச் செய்த அப். கார்மேல் அருட்சகோதரிகள் இறைவன் செய்த அரும் செயல்களை நினைத்து நன்றி கூறும் நாளாக இது அமைகின்றது. "ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று உன்னதரே உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று" எனும் 92வது திருப்பாடல் கூறுவது போன்று நாமும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

இந்நூற்றாண்டு கால வரலாற்றில், அப். கார்மேல் சபை ஸ்ரீலங்காவில் அனுராதபுரம், இரத்தின புரி மறைமாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மறைமாவட் டங்களில் 40 கன்னியர் இல்லங்களையும், பாகிஸ் தானில் 04 கன்னியர் இல்லங்களையும் கொண்டதாகப் பரவியுள்ளது. "இறைவனே எம் நிறைவு" எனும் அருட் கொடையினைக் கொண்டதாக இறையரசின் மதிப்பீடுகளை கல்வி மற்றும் சமூக நலப்பணி மூலமும் பரப்பி, சமூகத்தில் இறைமகன் இயேசுவின் பணியாளர்களாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கார்மேல் தோட்டத்தில் பணிபுரிய பல உள்ளங்களை இறைவன் அழைக்க வேண்டுமென்றும், எம் நிறுவுனர் விரைவில் திரு அவையின் புனிதர்களில் ஒருவராக மிளிர்ந்திட வேண்டு மெனவும் வேண்டி நிற்கின்றோம்.

தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

நம்பிக்கையின் உண்மைகள்

13. இறைவன் வெளிப்படுத்திய பிரதானமான உண்மைகள் எங்கே காணப்படுகின்றன?

இறைவன் வெளிப்படுத்திய பிரதானமான உண்மை கள் திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையில் காணப் படுகின்றன.

14. திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையைத் தருக?

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல் லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்.
அவருடைய ஒரே மகனாகிய இயேசுக் கிறிஸ்துவையும் நம்புகிறேன்.
இவர் தூய ஆவியாரால் கருவுற்று புனித மரியாவிட மிருந்து பிறந்தார்.
பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.
பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகம் சென்று எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார்.
அவ்விடமிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க மீண்டும் வருவார்.
தூய ஆவியாரை நம்புகிறேன்.
தூய கத்தோலிக்க திரு அவையையும்
புனிதர்களின் சமூக உறவையும் நம்புகிறேன்.
பாவ மன்னிப்பை நம்புகிறேன்.
உடலின் உயிர்ப்பையும் நம்புகிறேன்.
நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்

15.திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை எவ் வாறு பிரித்துக் கொள்ளப்படுகிறது?

திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையானது 12 பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது.

நம்பிக்கை அறிக்கையின் முதலாம் பிரிவு

16. நம்பிக்கை அறிக்கையின் முதலாம் பிரிவு எது?

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின் றேன்.

17. இறைவன் யார்?

இறைவன் உன்னதமான அரூபியாக இருக்கின்றவர்.

18. ஏன் இறைவன் அனைத்து வல்லமையும் உள்ளவரென அழைக்கப்படுகின்றார்?

இறைவன் அனைத்து வல்லமையும் உள்ளவரென அழைக்கப்படுவதற்குக் காரணம் அவர் அனைத்தும் செய்ய வல்லவராக (கூடுமானவராக) இருக்கின்றார்: "மனிதரால் இது இயலாது. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும்" (மத். 19:26).

19. இறைவன் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தாரென ஏன் அழைக்கப்படுகின்றார்?

இறைவன் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தாரென அழைக்கப்படுவதன் காரணம் அவர் விண்ணுலகையும் மண்ணுலகையும் அனைத்துப் படைப்புக்களையும் ஒன்றுமில்லாமையில் இருந்து தனது வார்த்தையால் உருவாக்கினார்.

20. இறைவனுக்குத் தொடக்கம் உண்டா?

இறைவனுக்குத் தொடக்கமென்று ஒன்று இல்லை. அவர் எப்பொழுதும் இருந்தார், இருக்கிறார், இருப்பார்.

21. இறைவன் எங்கே இருக்கிறார்?

இறைவன் எங்கும் இருக்கிறார்.

22. இறைவன் அனைத்தையும் அறிபவராகவும் பார்ப்ப வராகவும் இருக்கிறாரா?

இறைவன் அனைத்தையும் அறிபவராகவும் பார்ப்ப வராகவும் இருக்கிறார். மிகவும் அந்தரங்கமான அல்லது இரகசியமான சிந்தனைகளைக் கூட அறிய வல்லவராக இருக்கிறார்.

23. இறைவனுக்கு உடல் உண்டா?

இறைவனுக்கு உடல் இல்லை. அவர் அரூபியாக (கண்ணால் பார்க்கக்கூடிய உருவம் அற்றவராக) இருக்கிறார்.

24. இறைவன் ஒருவராகவா இருக்கிறார்?

ஆம். இறைவன் ஒருவராகவே இருக்கிறார்.

25. இறைவன் ஆள்தன்மையில் மூவராக செயற்படு கிறாரா?

ஆம். இறைவன் ஆள்தன்மையில் மூவராக செயற் படுகிறார்: தந்தையாகிய இறைவன், மகனாகிய இறை வன், தூய ஆவியாராகிய இறைவன். (தொடரும்)

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

என் கேள்விக்கென்ன பதில்!

(கலா, யாழ்ப்பாணம்)

கேள்வி: கடந்த வாரத்தில் இலங்கை மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான சுவிஸ்நாட்டுத் தூதுவர் வடகிழக்கு ஆயர்களைச் சந்தித்தபோது நம் முடைய ஆயர்கள் தற்போதைய அரசின் நடவடிக்கைகளை காரசாரமாக விமர் சித்திருப்பதாகப் பத்திரிகைகள் தெரி விக்கின்றன. உண்மைதானா?

ப: கலா, உண்மைதான். அரசின் நடவடிக்கைகள் எப்படிப் போகின்றன என்பதற்கு 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற சுலோகத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் ஜனா திபதி ஆணைகுழுவையும் அதன் தலை-வரையும் பார்த்தால் நாட்டின் தலைவர் எப்படி யோசிக்கின்றார், என்ன செய்வார், எப்படிச் செயற்படப் போகின்றார் என்பதை சராசரி அறிவுடையவர்கள்கூடப் புரிந்து கொள்வார்கள். இதன் அடிப்படையில் நம் முடைய ஆயர்களும் தங்கள் அவதானிப் புக்களையும் கரிசனைகளையும் வெளிப் படுத்தி இருப்பார்கள். இனியும் பேசாதிருந் தால் இருப்பதையும் இல்லாதொழித்து விடுவார்கள்!

(கவி, மன்னார்)

கே: நல்ல நல்ல கவிதைகள் எல்லாம் எழுதுகின்றீர்கள். எங்களுக்கும் ஒரு கவிதை தருவீர்களா?

ப: அதற்கென்ன கவி! கவிதைக்கா பஞ்சம்! தருகின்றேன், பருகுங்கள்! தமிழே தான்! என்ற தலைப்பில் ஓர் ஆசிரியப்பா வைச் சுவையுங்கள்!

தழுவ நெஞ்சம் தாகம் கொண்டு
தொழுது நாளும் தொடர்ந்து சென்று
தொட்டுத் தூக்கிக் தோளில் போட்டுக்
கட்டி அணைத்துக் கலந்து மகிழ்ந்து
கொட்டி இன்பம் கோடி தந்திடேல்
விட்டே உன்னை விலக மாட்டேன்!
வரமாய் வந்து வாரித் தழுவிக்
கரமே பற்றிக் காலமும் வாழ

அமிழ்தைப் போன்றே அருந்தி மகிழத்
தமிழே வாராய்!
தாயே தயவே!
கவி, கவிதையாக இருக்கின்றதா?

(யோசப், யாழ்ப்பாணம்)

கே: வடகிழக்கு ஆயர் மன்றம் 'போரி னால் இறந்த அனைவரையும் நினைவு கூரும்' செயற்பாட்டிற்கு நாலாபக்க மும் பலத்த எதிர்வினைகள் வந்திருக் கின்றன. இது எதனைக் காட்டுகின் றது?

ப: யோசப், புரிதலின் தரத்தினைக் காட்டுகின்றது! அதாவது, புத்திஜீவிகள் மத்தியில்கூட புரிதல் எப்படி இருக்கின்றது என்பதைப் புடமிட்டுக் காட்டுகின்றது!

(மதன், மன்னார்)

கே: விவசாயிகள் குறித்து ஜனாதிபதி கூறிய கருத்தை வைத்துக்கொண்டு 'ஜனாதிபதி கோட்டாவுக்குத் தலையில் கோளாறுள்ளது' என ஒரு தேரர் விசர்சித்திருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். உங்களது கருத்தை அறிய ஆவலாய் இருக்கின்றேன்?

ப: மதன், என் மனத்திற்குள் நீண்ட நாள்களாக இருந்த சந்தேகத்துக்குத் தீர்வு கிடைத்துவிட்டது போன்ற உணர்வு ஏற் பட்டது!

(யாழினி, யாழ்ப்பாணம்)

கே: என் கேள்விக்கென்ன பதில் அட்ட காசமாய் இருக்கின்றது! என்ன காரணம்?

ப: கேள்வி பதில்களால்தான் யாழினி!

(றொசான், மன்னார்)

கே: 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைகுழுவுக்கு இலங்கைக் கத் தோலிக்க ஆயர் மன்றம் கடும் எதிர்ப் பினைத் தெரிவித்திருப்பதாகத் தெரி கின்றது! அந்த அறிக்கையைப் படித் தீர்களா?

ப: படித்தேன் றொசான். கடுமையான அதிருப்தியையும் எதிர்ப்பையும் தெரிவித் திருக்கின்றார்கள் ஆயர்கள்! 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி ஆணைக் குழுவின் நியமனத்தோடு நாட்டுத் தலை வரின் மனநிலை எப்படிப்பட்டது என்பதை அனைவரும் புரிந்திருப்பார்கள்! விதி விலக்காக ஒரு சாராருக்குத்தான் இன்னும் புரியவில்லை! விரைவில் புரிந்துவிடும் என எதிர்பார்க்கலாம்!

கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)

கே: சாமான்களின் விலையை நினைக்க சாப்பிட மனம் வருகுதில்ல! கண்மண் தெரியாமல் வர்த்தக நிறு வனங்கள் விலைகளை ஏற்றுவதோடு வியாபாரிகளும் தங்களுக்கு விருப்ப மான மாதிரி விற்கின்றார்கள்! இப்பிடியே போனால் எங்குதான் போய் முடியுமோ?

ப: அன்ரன், சந்தேகத்துக்கு இடமில்லாமல் கைலாலயத்திற்குத்தான்!

(யோசப், யாழ்ப்பாணம்)

கே: பிள்ளைகளில் வாசிப்புப் பழக்கத் தைத் தூண்டுவதற்கு என்ன செய்ய லாம்?

ப: யோசப், நன்கு வாசிப்புப் பழக்க முடைய ஒரு தாயிடம், "உங்கள் குழந்தை தொடுபேசியோடு நீண்ட நேரம் விளையா டாமல், எப்படி அது வாசிக்கின்ற, நூல் களைப் படிக்கின்ற பழக்கத்தைக் கற்றுக் கொண்டது?" எனக் கேட்கின்றார்கள். அவளோ, 'குழந்தைகள் நாம் சொல்வதைக் கேட்டு நடப்பது குறைவு! ஆனால், நாம் செய்வதைப் பார்த்துச் செய்வார்கள் (நாம் செய்வதைப் பார்த்துப் பின்பற்றுவார்கள்)!' என்றாளாம். உண்மை! நாம் வாசித்தால் அவர்களும் வாசிப்பார்கள், நாம் தொடு பேசியோடு தொட்டு விளையாடிக் கொண்டி ருந்தால் அவர்களும் அவ்வாறே செய்வார் கள்! நீங்கள் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். அதனைப் பார்க்கின்ற உங்கள் குழந்தைகளும் அதனை வளர்த்துக் கொள்வார்கள்.

(சசி, மன்னார்)

கே: தம்மைப் பெற்று வளர்த்த பெற்றோரையே சில பிள்ளைகள் பராமரிக்காது விட்டுவிடுவது கவலை அளிக்கின்றது! ஏன் இப்படிச் செய் கின்றார்கள்?

அருட்பணி செ. அன்புராசா

ப: சசி, ஓய்வூதியம் பெற்றால் சரி, பெறவில்லை என்றால், வயதுபோனவர் களைப் பாரமாகக் கருதுகின்றார்கள் சில பிள்ளைகள்! இன்னும் சிலர், பிரயோசனம் இல்லாதவர்களாக அவர்களைப் பார்க்கின் றார்கள். அதனால், அவர்களைப் பராம ரிக்க வேண்டிய கடமையில் இருந்து தவறுகின்றார்கள் பிள்ளைகள்! ஒரு-தடவை முதியவர் ஒருவர் தன் தொடு பேசியில் நீண்ட நாட்களாக அழைப்புக்கள் வராததால் பழுதாகி இருக்கலாம் என நினைத்துக்கொண்டு திருத்துவதற்காகக் கொண்டு சென்றார். திருத்துனர் அத னைப் பரிசோதித்துவிட்டு, "ஒரு பிழையும் இல்லை ஐயா! போன் நன்றாகத்தான் இருக்கின்றது!" என்கின்றான். அப்போது அம்முதியவர், 'அப்படியென்றால், ஏன் என் பிள்ளைகள் அழைப்பதே இல்லை!' என்றாராம் கண்ணீருடன்!

(விஜி, யாழ்ப்பாணம்)

கே: எப்போதும் கைபேசியோடு இருப் பவர்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?

ப: விஜி, ஒரு வீட்டில் நடந்த சம்பவத்தைச் சொல்கின்றேன். சோற்றைக் குளைத்து அள்ளி உண்டபடி கணவன் மனைவி யைப் பார்த்து, "மோபையில நோண்டிக் கிண்டு சமைக்காத, சமைக்காத எண்டு எத்தின தடவையடி உனக்குச் சொல்லுறது! ரசத்தில உப்பும் இல்ல, புளியுமில்ல, ஒரு மண்ணுமில்ல!" என்கின்றான் ஆவேசத் தில்! அவளோ, 'நீங்க மோபையில நோண்டாம சாப்பாட்டப் பாத்துச் சாப்பிடு ங்க, சாப்பாட்டப் பாத்துச் சாப்பிடுங்க எண்டு எத்தின தடவை சொல்லியிருப் பன்!! நீங்க ஊத்துனது ரசம் இல்ல, தண்ணிர்)!!!' என்றாளாம்.

(ஜெயா பாலாஜி, முருங்கன்)

கே: மதுப் பாவனையால் நடக்கும் சீரழிவுகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் முடிவே இல்லையா?

ப: ஜெயா அக்கா, தனிமனிதர்களும் சமூகமும் விழிப்புணர்வு பெற்று வீறு கொண்டெழுந்தால் முடிவும் உண்டு, விடி வும் உண்டு!

இன்னும் கொஞ்சம்

புன்னகை செய்யுங்கள்
புரிந்து கொள்ளுங்கள்
உதவி செய்யுங்கள்
பரிவாய்ப் பேசுங்கள்
உண்மை பேசுங்கள்
முயற்சி எடுங்கள், திட்டமிடுங்கள்

திருமண பொன் விழா வாழ்த்து

11.12.1971ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்து
11.12.2021 அன்று பொன்விழாக் காணும்
திரு.திருமதி நாகேந்திரம் றெஜினா
(மல்லிகா)
தம்பதியினரை மனமுவந்து வாழ்த்துகிறோம்

எங்கள் குடும்பத்தின் இனிமையான தம்பதியினரே
திருமணபந்தத்தின் பொன்விழாக் கதாநாயகர்களே
இல்லறம் எனும் நல்லறம் வாழ்ந்துகாட்டும் நீவீர்
நலமுடனே வாழ வாழ்த்துகின்றோம்
உங்கள் பொன்னான வாழ்வுதனை
உவந்தளிக்கும் இறைவனுக்கு நன்றி கூறி
என்றும் பல்லாண்டு
நீடுழி நீவீர் வாழ வாழ்கவென
வாழ்த்தி இறையருளை வேண்டுகின்றோம்

அன்புடன் வாழ்த்தும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர,
சகோரிகள், மைத்துனர்கள்

இல்லற வாழ்வில்
பொன் விழா

திரு. திருமதி
தேவசகாயம் கமிலஸ் செல்வரட்ணம்
றீற்றா றோசலின்

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றி
பெருமைப்படுத்துகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது
மனம் பேருவகை கொள்கிறது" (லூக்கா 1:47)

பொன்விழாக் காணும் உங்களை நெஞ்சார
வாழ்த்தி மகிழ்கின்றோம்.
பிள்ளைகள்
டிலானி, தேவயன் கவிதா,
மருமக்கள்
டக்லஸ், டேவிட், கலக்ஸி
பேரப்பிள்ளைகள்
டெரி, டியான், டனி, தமிஷா, தேவன்

23.10.2021

காவலன் கலசம்

இருளாட்சி மறையட்டும்! இறையாட்சி நிறைவாகட்டும்!

எமது சமூகங்கள் பல்வேறுபட்ட பண்பாட்டுச் சிதைவுகளுக்கு உள்ளாகி அவலநிலைக்கு உள்ளாகி வருவதைக் காணலாம். களவு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, கலாசாரச் சிதைவு, இயற்கை அழிப்பு, இனஅழிப்பு, இடைவிலகல் மாணவர், போதைப்பொருட்பாவனையால் வாதைப்படும் இளையோர், அழுது புலம்பும் பெற்றோர், பிரிவுறும் குடும்பங்கள் எனப் பல்வேறுபட்ட உபாதைகளை எதிர் கொண்டு வருவதைக் காணலாம். இந்நிலையை மாற்றிட, பல்மட்டத் தலைவர்களும் பெற்றோரும் இளையோரும் ஒன்றிணைதல் அவசரமும் அவசியமானதுமாகும்.

இறையாட்சி பற்றிக் கனவு கண்ட இயேசு அதனை நனவாக்குவதற்குப் பல பாடுகள் பட்டு இறையாட்சி பற்றிய பாடத்தைத் தனது ஆளுமை வெளிப்பாட்டாலும் போதனையாலும் அருட்சாதனைகளாலும் கற்றுக்கொடுத்தார்.

1.“ஏழையின் உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது” (மத்தேயு 7:3).

ஏழைகள் யார்? ஏழையரின் மனோபாங்கு எத்தகையது? இறைவனில் முற்று முழுதாகத் தங்கி, இறைவனில் நிறை இன்பத்தை அனுபவித்து மகிழ்ந்திட முற்படுபவர்களே ஏழையர் ஆவர். இவர்கள் பிடிவாதப்போக்கு, முரட்டுத்தனம், கடுமை, காட்டுமிராண்டித்தனம், உலோபித்தனம், உலக செல்வங்களுக்கு அடிமையாதல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு உவகையுறுவார்கள்.

2. “துயருறுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்” (மத்தேயு 5:4).

மனித வாழ்க்கையில் துன்பங்கள், வருத்தங்கள் வருவது சகஜம். எனினும் அவற்றை நன்மனத்தோடு ஏற்றுகொள்ளும் மனப்பான்மை எம்மில் காணப்படும் பொழுது நாம் பேறு பெற்றவர்களாய். ஆறுதல் அடைந்தவர்களாய் காணப்படுவோம். “சுமை சுமந்து சோர்ந்திருப்போரே! எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களுக்கு அமைதியை அருளுவேன்” என்று கூறுகின்ற இயேசு என்றும் நிலையான அமைதியைத் தருபவராய், கவலையை விட்டுவாழும் வழிமுறைகளைக் கூறுபவராய் விளங்குகின்றார்.

“என் மனதில் கவலைகள் நெருங்கும் பொழுது என் உள்ளத்தை உமது ஆறுதல்வார்த்தைமகிழ்விக்கின்றது”
– திருப்பாடல் 99 : 19

3. கனிவுடையோர் பேறு பெற்றோர் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். (மத் 5:5).

உள்ளத்தால், உணர்வுகளால் இனிதாகப் பழகும்தன்மை உடையோரே கனிவுடையவராவர். இறுமாப்பு இன்றி பிறரின் இன்ப துன்பங்களில் ஒத்த உணர்வோடு பங்கெடுக்கும் ஆற்றல் உடையவராய் இவர்கள் விளங்குவார்கள்.

அழுவாரோடு அழுவதும் சிரிப்பாரோடு சிரிப்பதும் இவர்களது இயல்பான பண்பாகும். விளைவாக, ”இவர்கள் இறை வீட்டை இறைவன் வாக்குப்பண்ணிய நாட்டைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்கள். ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர்”

- திருப்பாடல் 145:8.

4. நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவார்கள் (மத் 5:6).

“நீதி நெறிகாப்போர் பேறு பெற்றோர்: எப்பொழுதும் நேரியதே செய்வோர் பேறு பெற்றோர் (திபா 106:3.). உரியதை உரியவருக்குக் கொடுப்பதே நீதியாகும். இல்லாதோருக்கு உள்ளத்தில் இருந்து உள்ளன்போடு கொடுப்பதும் நீதியாக அனைத்தையும் வெற்றிகாண நடவடவடிக்கை எடுப்பதும் இங்கு சாத்தியமாகின்றது.

“நீதியும் நேர்மையும் உம் அரியணைக்கு அடித்தளம்” (திருப்.பாடல் 89:14).

5. “இரக்கமுடையோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்” (மத்தேயு 5:7).

“இறைத் தந்தை இரக்கமுடையவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுடையவராய் இருங்கள்” (லூக்கா 6:36) என்று இயேசு கூறுவது இறைவனின் இயல்புப் பண்பாகிய இரக்கம் எம்மிலும் பரவலாகப் காணப்படும்பொழுது எமது மீட்புப் பயணம் ஆரம்பமாகி விட்டது எனலாம்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி.

இறைவனும் மனிதனும் இணைந்து பயணிக்கும்பொழுது இரக்கம் மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம்.

“உமது பேரன்பிற்கேற்ப களிவிரக்கம் கொண்டார். அவர்களைச் சிறை செய்து அனைவர் முன்னிலையிலும் அவர்கள் இரக்கம் பெறும்படி செய்தார்”

(திபா106:45-46)

என்று இஸ்ராயேல் மக்கள் சார்பாக இறைவனின் இரக்க வெளிப்பாடு புலனாகின்றது.

6. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் (மத்தேயு 5:8).

“உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளர்”

என்று திருவள்ளுவர் கூறும் நிறைவாக்கு விளக்கம் கொடுப்பவர்கள்

தூய்மையைத் தம்முள் துலங்குவார்கள். இறைவனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்று பேறுடையோர் எனப் போற்றப்படுகிறார்கள் என்று தாவீது அரசர்பாடுவது உண்மையான அமைதி இறைவனிடமிருந்தே வருகிறது என்பதை

நினைவுட்டுகிறது. மனிதன் தரும் சமாதானம் போல் அல்லாது இறைவன்

தரும் சமாதானமானது என்றும் நிலையானதாக இருக்கின்றது.”உங்களுக்கு

அமைதி உரித்தாகுக” (யோவா2021) என்று உயிர்த்தெழுந்த இயேசு திருத்தூதர்களுக்குக் கூறிய வார்த்தைகள் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் ஆறுதல் அளிப்பவையாக அமைகின்றன. ஆர்வத்தோடு நற்செய்தியை நாநில மெங்கும் பரப்பும்தூதுவர்களாக இயங்க வைக்கின்றன.

7. “நீதியின் நிமித்தம் துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றோர்! ஏனெனில்
விண்ணரசு அவர்களுக் குரியதே”

“பேரன்பும் உண்மையும்
ஒன்றை ஒன்று சந்திக்கும்.
நீதியும் நிறை வாழ்வும்
ஒன்றை ஒன்று முத்தமிடும்.
மண்ணினின்று உண்மை
முளைத்தெழும்.
விண்ணினின்று நீதி கீழ் நோக்கும்.
நல்லதையே ஆண்டவர் அருளுவார்.
நல்விளைவை நம் நாடு நல்கும்”

என்று திருப்பாடல் 85:10-12 இறையாட்சியில் நீதி மாட்சிமைப்படுத்தப் படுவதை வலியுறுத்துகிறுது. நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படும் வேளைகளிலெல்லாம் சரி சரிவது போலவும் பொய்மைவெல்லுவது போலவும் தோற்றம் அளிக்கலாம்

ஆயினும், ஈற்றில் மெய்மையே மேலானதாகவும் நீதியே நிலையானதாகவும் ஏற்றம் பெறுகிறது என்பதே உறுதி. இவ்வாறு கிறிஸ்து மொழிந்த எட்டுப் பெறுபேறுகள் ஒரு நல்ல கிறிஸ்தவ பக்தனின் நற்பண்புகளாக மிளிர்கின்றன.

இவை ஒன்றோடொன்று இணைவுற்று ஒருங்கிணைந்து நல்வாழ்க்கை முறைக்கு வித்திட்டு நிலையான பேரின்ப வாழ்வுக்கு இட்டுச்செல்கின்றன.

8. “என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும் பொழுது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள். ஏனெனில், விண்ணரசில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும்” (மத்தேயு 5.11–12).

வருத்தம் இன்றித் திருத்தம் இல்லை.
துன்பம் இன்றி இன்பம் இல்லை.
உளியைச் சந்திக்காத பாறை சிற்பமாக வாய்ப்பில்லை.
வேதனையின்றிச் சாதனையில்லை.
வாதைப்படுத்தும் உலகிற்கு
தீது விளைவிக்கக்கூடாது.

இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லி எம்மைப் பிறர் இம்சைப்படுத்தும் பொழுது நாம் மனமுடைந்து போகக் கூடாது. மாற்றக்கூடியதை மாற்றக்கூடிய துணிச்சல் வேண்டும். மாற்ற முடியாத வற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் வேண்டும். எனவே,

◆இறையாட்சி மேலோங்கிட புது வாழ்வுப் பயணிகளாக எம்மை மாற்றிடுவோம்.

◆ அன்பர்களையும் பகைவர்களையும் தர்மர்களையும் துரியோதனன்களையும் வள்ளல்களையும் கள்வர்களையும் வீரபாண்டியன்களையும் எட்டப்பர் கூட்டத் தினையும் ஒருங்கே எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தில் வளர்ந்திடுவோம்.

◆எமக்குள் புதைந்திருக்கும் அற்புத மான திரவியங்களைக் கண்டுணர்ந்து, அகவிடுதலையை எய்திட முயற்சி எடுப்போம்.

◆அமைதியின் தூதுவர்களாய் அவனியில் அகம் மகிழ்வோம்.

◆இருளினைப் பழிக்காது ஒளியினை ஏற்றிடுவோம்.

◆இதயத்தில் வெளிச்சம் ஏற்றி இறுதிவரை எரிந்திடுவோம்.

◆அலகையினை வென்று உலகின் ஒளியாவோம். ●

கடவுளின் கட்டாய.....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இது இயற்கையின் சீற்றமா? அல்லது இறைவனின் சீற்றமா ?என்பதையும் நாம் புரிந்து கொள்ள முயலுவதே மேலானது. பிரித்தானியா அறிவியலாளரின் கூற்றுப்படி கொரோனா உலகத்தை விட்டுப் போகாது என்பது இதனுடன் தான் நாம் வாழ பழகிக் கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தடுப்பூசிகள், சுகாதாரக் கட்டுப்பாடுகள் ஓரளவு இதன் தாக்கத்தை கட்டுக்குள் வைத்திருக்கவே முடியும் என்பதே உண்மையாகும். இத்தகைய உலகளாவிய பின் புலத்தில் கடவுளின் கணக்கு (Countdown) எப்படி அமையப் போகின்றது என்பதே முக்கியமானதாகும். இயற்கை தன் சமநிலையைப் பேணுவது ஒருபுறமிருக்க, கடவுளின் பார்வையில் இந்த உலகளாவிய உயிரியல் போரை எப்படி விளங்கிக் கொள்ளப் போகின்றோம் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழைய இயல்பு வாழ்விற்குத் திருப்புவதைப் பற்றிச் சிந்திக்கலாம், இவ் உயிரியல் போரின் மத்தியிலும் நாம் கடவுளின் திட்டத்திற்கு அமைவாக வாழ்கின்றோமா என்பதையே சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் உலகமும் அதன் இலக்கும் (Destiny) கடவுளின் கரங்களில்தான் உள்ளது என்பது மீண்டும் எண்பிக்கப்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கை என்பது மீண்டும் நாளாந்தம் நாம் ஆற்றும் பணிகளைச் செய்வதற்கான சூழலை இனி நாம் தொடர்ச்சியாக அனுபவிக்க முடியுமா என்பது எதிர்காலத்தில் கேள்விக்குறியாகவே அமையப் போகின்றது. பொருளாதார சரிவுகளும் நிச்சயமற்ற திட்டமிடும் செயற்பாடுகளும் உலகத்தின் இலக்கை ஓரளவு தான் தீர்மானிக்க முடியும் என்பதை உலகளாவிய கொரோனாச் சூழல் எடுத்துரைக்கின்றது. இதில் நாம் எமது தனிப்பட்ட சமூக, ஆன்மீக வாழ்வு வேறு தளத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதில் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதே பலரது போராட்டமாகும். நாம் மீண்டும் மானிடத்தின் இருப்புக்களையும், வேர்களையும் தேடிக் கண்டடைவதே இன்றைய சூழலை எதிர்கொள்வதற்கான ஒரேயொரு வழியாகும். இறைவனிடம் திரும்புவதே எமக்கு முன்னாலுள்ள தவிர்க்க முடியாத தேர்வாகும். இதை நோக்கி நாம் பயணிக்க தயாரா?

குதூகலிக்கும் பருவம்

ஒரு குடும்பத்தில் ஒரு பட்டாம் பூச்சியைப் பிடிப்பது போன்றே குழந்தைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. அழுத்திப் பிடித்தால் சிறகுகள் சிதைந்து போகலாம். லேசாகப் பிடித்தால் அந்தப் பட்டாம்பூச்சி நம் கையிலிருந்து பறந்தும் போகலாம். சிறகுகள் சிதைந்து போவதைவிட நம் கையில் இல்லாவிட்டாலும் பட்டாம் பூச்சிகள் சந்தோஷமாகப் பறந்து போவது பரவாயில்லை என்று தோன்றுகிறது. சிறகுகளைச் சிதைக்காமல், சிறகடிக்கத் திசைகொடுத்தால் சிகரங்களைத் தொடும் நம் இளைய சமுதாயம். இளைஞர்களின் இறக்கைகளைப் பிய்த்து விடாமல், களைகளை மட்டும் தறித்துவிடுங்கள், மிகுந்த கனி கொடுப்பார்கள்!

வையக வாழ்வின் 100 ஆவது ஆண்டு நினைவு தினம்

மண்ணக வாழ்வில்
20 . 11 . 1921

விண்ணக வாழ்வில்
02 . 08 . 1998

AD 81

அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு

(முன்னாள் உதவிபாலதிபர் சிலாவத்துறை)

"உமது இல்லத்தில் தங்கியிருப்போர்
நற்பேறு பெற்றோர். அவர்கள் எந்நாளும்
உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள்"
தி.பா. 84:4

ஆண்டவர் சந்நிதியில் அமைதிபெற்று மகிழ
இறைவன் பாதத்தில் அமர்ந்து
வேண்டுகிறோம்.

இவரின் நினைவில் என்றும் வாழும்
பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

5ம் வட்டாரம்,
மண்டைதீவு

31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
20 . 02 . 1942

உதிர்வு
25 . 10 . 2021

அருட்சகோதரி லூட்ஸ் அருளானந்தம் (FMM)

மரியாயின் பிரான்சிஸ்கன் சபை - கொழும்பு

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் 25.11.2021 காலை 5.30 மணிக்கும், கொழும்பு பிலியந்தலை புனித சூசையப்பர் கன்னியர்மட சிற்றாலயத்தில் காலை 7.00 மணிக்கும் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டது.

AD - 82

41, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

விண்ணக வாழ்வின் 8ம் வருடம்

அன்னை மடியில்
17 - 01 - 1937

ஆண்டவன் அடியில்
05 - 12 - 2013

அமரர்

சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட் (JP)

[இளைப்பாறிய இ.போ.ச. டிப்போ அத்தியட்சகர்]

"உனி பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன். நீ எனக்குரியவனி" [எசாயா 43:1]

நீர் இவ்வுலகில் எம்மைத் தவிக்க விட்டு இறைவனின் வான் வீட்டில் இன்புற்று இருக்கச் சென்று எட்டு ஆண்டுகள் ஆனது. இவரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றிக்காக ஆனையூர் அடைக்கலநாயகி ஆலயத்தில் 04.12.2021 (சனிக்கிழமை) காலை 6.00 மணிக்கும் யாழ் உத்தரிய மாதா ஆலயத்தில் காலை 6.00 மணிக்கும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

AD-89

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

2ம் ஆண்டு நினைவுகள்

மண்ணுலகில்
17 - 07 - 2010

அமரர்

விண்ணுலகில்
19 - 11 - 2019

சி.பென்சிக் றஜாந்தி

[மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி]

"அஞ்சாதே நான் உன் பெயரைச் சொல்லி
உன்னை அழைத்தேன். நீ எனக்குரியவள்"

AD 86

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளில்
குடும்பத்தினர்

3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
28 . 12 . 1933

உதிர்வு
02 . 12 . 2018

அமரர் எட்வேட் திரேசம்மா

(கோவில் வீதி- யாழ்ப்பாணம்)

மாதங்கள் பத்து மடி தன்னில் சுமந்து
உம் உதிரத்தைப் பாலாக்கி
தாலாட்டிச் சீராட்டி நல்லதொரு நிலைக்கு எம்மை உயர்த்தி
எம்மை வாழ வைத்த எம் தாயே
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்

உம் ஆன்ம சாந்தி பெற இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

AD - 85

உம் பிரிவால் துயருறும்
மகன், மருமகள், பேத்தி

31ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 . 11 . 1942

விண்ணில்
22 . 10 . 2021

அமரர்

பஸ்ரியாம்பிள்ளை கயித்தாம்பிள்ளை

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)

கருணைக் கடலாகிய இறைவா!
உம்மிலே நம்பிக்கை கொண்டு வாழ்ந்து
இறந்த அடியானின் ஆன்மாவிற்கு
வான்வீட்டில் இடமளித்தருள வேண்டுமென்று
இறைஞ்சுகின்றோம்.

AD -84

பெரியவிளான்,
இளவாலை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 . 02 . 1938

விண்ணில்
26 . 11 . 2020

AD 83

அமரர் சவிரிமுத்து யோசவ் பெர்னாண்டோ

(யப்பான் சூசைப்பிள்ளை)

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் – கரம்பொன் கிழக்கு

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்று கூறிய இரக்கம் நிறைந்த இறைவா! இவ்வுலக வாழ்வில் இருந்து விண்ணக வாழ்விற்கு அழைத்துக் கொண்ட உமது அடியார் அமரர் சூசைப்பிள்ளை அவர்களின் பாவங்களை மன்னித்து உமது வான் வீட்டில் நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் உங்கள் நினைவுகள் என்றென்றும் அழியாது அப்பா. கண்ணின் இமைபோல எம்மைக் காத்த அப்பாவே உங்கள் நினைவுடன் என்றும் வாழ்கிறோம். இறுதிச் சடங்கிற்கு வெளிநாட்டில் இருந்து வரமுடியாததை நினைத்து மனம் வருந்துகிறோம். உமது சிரித்த முகம் எம்மை விட்டுப் பிரிந்தது. உங்கள் பாசம் ஒன்றே எம்மை விட்டுப் பிரியாதது.

153, 3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

பொன்விழாக் காணும் அருட்திரு யெயசேகரம்

யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிவரும் மூத்த குருக்களில் ஒருவரான அருட்திரு யெயசேகரம் அடிகளார் தமது குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடி மகிழ்ந்தார்.

அல்லைப்பிட்டி வெண்புரவிக் கிராமத்தில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் வெள்ளிவிழா நன்றித்திருப்பலியை அருட்திரு யெயசேகரம் அடிகள் சகோதர குருக்களுடன் இணைந்து ஒப்புக்கொடுத்தார்.

அருட்திரு யெயசேகரம் அடிகள் யாழ்ப்பாணம் மன்னார் மறைமாவட்டங்களின் பல பங்குகளில் பணியாற்றியுள்ளார். இவர் ஒரு சிறந்த சமூகவியலாளராகவும், இறையியல் விரிவுரையாளராகவும் கல்விப் புலத்தில் பல பணிகளை ஆற்றி வருகின்றார். ஜேர்மன் நாட்டில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநராகப் புலம்பெயர் கத்தோலிக் கர்களுக்குப் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். குருநகர் மக்களின் சமூக தேவைகளைக் கருத்தில் கொண்டு அல்லைப்பிட்டியில் வெண்புரவிக் கிராமம் ஒன்றை அமைத்து அங்கு குடியமர்ந்துள்ள மக்களுக்கு அளப்பெரும் பணியாற்றியுள்ளார். பாதுகாவலன் பத்திரிகையில் காலத்திற்குக் காலம் சிறப்புக் கட்டுரைகளை எழுதி வரும் அடிகளாரைப் **பாதுகாவலன்** வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வெள்ளிவிழாக் காணும் அருட்சகோ. மரிய பிரகாசம்

மொன்பேட் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் மரியபிரகாசம் அவர்களின் துறவறவாழ்வின் வெள்ளிவிழா 16 ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை அல்லைப்பிட்டி தூய கார்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் வெள்ளிவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற கௌரவிப்பு - கலைநிகழ்வுகளில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மொன்பேட் அருட்சகோதரர் குழுமத்தின் முதல்வர் அருட்சகோதரர் இருதயம், முந்நாள் முதல்வர் அருட்சகோதரர் மரியணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அருட்சகோதரர் மரியபிரகாசம் அவர்கள் யாழ். மறைமாவட்டத்தில் அமையவிருக்கின்ற முதலாவது சர்வதேச பாடசாலையின் ஆக்கபூர்வப்பணிகளில் அல்லைப்பிட்டியில் பெரும்பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இளையோர் ஒன்றிய செயற்குழுக் கூட்டம்

யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றியச் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் இருபதிற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டதுடன் உலக ஆயர்கள் மாமன்ற ஆயத்தப்பணிகளில் இளையோர்களின் வகிபாகம் பற்றியும் கலந்துரை யாடப்பட்டன.

நவாலியூர் நாயகி காலமானார்

நவாலியைச் சேர்ந்த மூத்த கத்தோலிக்க கவிஞரும் எழுத்தா ளருமாகிய திருமதி மேரி நாயகி மரியதாஸ் அவர்கள் தமது 81வது அகவையில் இறைவனடி சேர்ந்தார். இவர் **பாதுகாவலன்** பத் திரிகையில் நீண்ட பல ஆண்டுகளாக கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றை இறை விசுவாசத்துடன் எழுதி வந்தவராவார்.

அத்துடன் இவர் பல கத்தோலிக்க வழிபாட்டுப் பாடல்களை வரியமைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மறைமாவட்டத் தின் மேய்ப்புப்பணி மாநாடுகளில் பங்கேற்று முன்னுதா ரணமுள்ள பொதுநிலையினராக இவர் திகழ்ந்தார். விடுதலை உணர்வுமிக்க இவர் போராட்ட காலத்தில் தம் கவிவரிகளில் மக்களின் துன்ப துயரங்களை வெளிக் கொணர்ந் தவராவார். அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோமாக.

கரித்தாஸ் நோர்வே செயற்திட்ட ஆலோசகர் யாழ். விஜயம்

கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தி வருகின்ற உணவுப்பாதுகாப்புச் செயற்திட்ட நிதிநிறுவனமான கரித்தாஸ் நோர்வே நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் ஆரோன் கால்பன், தேசிய நிலைய இயக்குநர் அருட்பணி. மகேந்திரா குணதிலக்க, தேசிய நிலைய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.பிரியந்த, உணவு பாதுகாப்பு செயற்திட்ட தேசிய நிலைய இணைப்பாளர் திருமதி நிலாணி திசேரா மற்றும் உணவுப்பாதுகாப்பு செயற்திட்ட பிராந்திய இணைப்பாளர் திரு.நிசாந்தன் ஆகியவர்களால் களத்தரிசிப்புக்கள் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

களத்தரிசிப்பின் ஆரம்ப நிகழ்வாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மகேசன் அவர்களுடன் யாழ்மாவட்டத்தின் களநிலை தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் பட்டதுடன் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களையும் சந்தித்து செயற்திட்டங்கள் மற்றும் களநிலை தொடர்பாகவும் கலந் துரையாடப்பட்டது.

பொதுநிலையினருக்கான சிறப்புக்கூட்டம்

யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழகக் கூட்டம் 18ஆம் திகதி யாழ் மறைக்கல்வி நிலைய த்தில் கழகத் தலைவர் திரு றோமியல் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் மறை மாவட்ட பொது நிலைக் கழக இயக் குநர் அருட்திரு. மவுலிஸ் அடிகளும் மறைக்கோட்டக் கழக இயக்குநர்களும், கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் சிறப்பு விருந் தினராகக் கலந்து கூட்டொருங்கியக்கம் ஆயர் மாமன்றம் மற்றும் அதற்கான ஆயத்தப் பணிகள் பற்றியும் கருத்துரை வழங்கினார்.

நாவாந்துறையில் உலக சிறுவர் தினம்

உலக சிறுவர் தினம் கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு சிறுவர் கழகத்தினரால் யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ச.இயூஜின் பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் நாவாந்துறை பொது மண்டபத்தில் கொண்டா டப்பட்டது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நோர்வே கரித்தாஸ் நிறுவனத்தின் மூத்த நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் திரு.ஆரோன் கால்பன் அவர்களும் தேசிய கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க அவர்களும் கலந்து சிறப்பித்தனர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும், ஓவியம், வாழ்த்துமடல், கண்காட்சியும், உலக சிறுவர் தினத்தை மகிழ்வூட்டி பரிசில்களும் சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

இறைபதம் அடைந்தார் அருட்பணி எட்மன் மைக்கல்

யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த மூத்த துறவிகளில் ஒருவரான அருட்திரு எட்மன் மைக்கல் அடிகள் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். 50வருடங்களுக்கு மேலாகக் குருவாக யாழ்ப்பானம், மன்னார் மறைமாவட் டங்களில் பல பங்குகளில் பங்குப்பணியாற்றியுள்ளார். இவர் பங்குத்தளங்களில் இறை அழைத்தலை ஊக்குவித் ததுடன் ஆங்கிலக் கல்வியை சிறந்த முறையில் கற்பித் துள்ளார். இவரின் ஆன்மா இறைவனில் அமைதிபெறப் பிரார்த்திப்போம்.

கத்தோலிக்க அச்சகத்தில் கிறிஸ்மஸ் பொருட்கள் விற்பனைக்கு
● பாலன் குடில்கள் ● கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்கள் ● மின் குமிழ்கள்
● கிறிஸ்மஸ் மரங்கள் ● அருள்வாக்கு 2022 ● மெழுகுவர்த்திகள்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.